# களத்தில்

27.12.2001 249 தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள்


இனப்பிரச்சினையை சமாதான வழி முறைகள் மூலமாகத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கை இன்னும் எம்மிடம் முற்றாக இடிந்துபோகவில்லை. சிங் கள அரசியல் தலைமைகள் உண் மையாக, உறுதியுடன் மனம்வைத் தால் சமாதானமும் இணக்கப்பாடும் ஏற்படும் சாத்தியமுண்டு.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன் அவர்கள்



# தமிழ் சிங்கள தேசங்களுக்கிடையிலான போர்நிறுத்தம்



சிறீலங்காவின் புதிய பிரதமர்
ரணில் விக்கிரமசிங்க.

## சமாதானத்திற்கான புதிய நம்பிக்கைகள்

**ரணில் தலைமையிலான புதிய சிங்கள அரசிற்கு விடுதலைப் புலிகள் வழங்கியிருக்கும் சமாதானத்திற் கான சந்தர்ப்பம்.**

**பதிலுக்கு போர்நிறுத்தம் செய்துள்ள சிங்களஅரசு, விடுதலைப் புலிகள் வழங்கியுள்ள சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சமாதானம் காண விளையுமா?**

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, சமாதானத்தைக் காண ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான புதிய அரசுக்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையிலும், முடங்கிப்போயிருக்கும் நோர்வேயின் சமாதான முன்னெடுப்புக்களை முன்னோக்கி நகர்த்தும் நோக்கிலும், ஒருதலைப்பட்சமாக ஒரு மாதகாலத்திற்கு போர்நிறுத்த அறிவித்தலைச் செய்திருக்கின்றது.

சமாதான முன்னெடுப்பிற்கு வாய்ப்பளிக்கும் ஒரு நல்லெண்ண முயற்சியாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், 19.12.2001 அன்று, ஒருதலைப்பட்ச ஒரு மாதகால போர்நிறுத்த அறிவித்தலை விடுத்தது.

'தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரும், பிரதம இராணுவத் தளபதியுமான திரு.வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள், தமிழர் விடுதலை இராணுவத்தின் சகல படையணிகளுக்கும் இன்று விடுத்துள்ள கட்டளையில், 2001ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ம் திகதி நள்ளிரவிலிருந்து 2002ம் ஆண்டு சனவரி மாதம் 24ம் திகதி நள்ளிரவுவரை, சிறீலங்காப் படைகளுக்கு எதிரான சகல இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்துமாறு பணித்துள்ளார்'

இவ்வாறு விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் 19.12.2001அன்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இலங்கைத்தீவில் சமாதானத்தை ஏற்படுத்த மக்கள் ஆணையைக் கேட்டு, மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று ஆட்சிபீடம் ஏறியிருக்கும் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான அரசிற்கு விடுதலைப் புலிகள் தமது தரப்பில் இருந்து நல்லெண்ண சமிக்ஞையை இதன்மூலம் காட்டியிருக்கின்றனர்.

'சமாதானத்திற்கும் இன ஒற்றுமைக்கும் சாதகமாக, தமிழ் சிங்கள மக்களால் வழங்கப்பட்ட மனுவாக இம்முறை பொதுத் தேர்தல் முடிவுகள் அமைந்தன. இதனால் ஊக்கமடைந்த எமது தலைமைப்பீடம், சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வாய்ப்பளிக்கும் நல்லெண்ண நடவடிக்கையாக, நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் ஆகிய பண்டிகைகளை உள்ளடக்கிய ஒரு மாதகாலத்திற்கு ஒருதலைப்பட்சமாகப் போர்நிறுத்தம் செய்வதற்கு முடிவெடுத்திருக்கின்றது. எமது இந்த நல்லெண்ண முயற்சியை சிறீலங்காவின் புதிய அரசு ஏற்றுக்கொண்டு, தனது ஆயுதப்படைகளையும் இக்கால கட்டத்தில் சமாதானம் பேணுமாறு பணிக்குமென நாம் நம்புகின்றோம். எமது ஒருதலைப்பட்சமான போர்நிறுத்த அறிவிப்பானது, சமாதானத்திலும், சமாதான வழிமூலமான தீர்விலும் எமக்குள்ள உண்மையான, நேர்மையான அக்கறையையும் ஆவலையுமே எடுத்துக்காட்டுகின்றது. நாம் உருவாக்கிக் கொடுத்துள்ள சமாதான இடைவெளியை புதிய சிங்கள அரசு ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்துமென நாம் நம்புகின்றோம். அதன்படி, தமிழ்மக்கள்மீது திணிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையையும், மற்றும் பல்வேறு நெருக்குவாரங்களையும் நீக்கி, தமிழர் தாயகத்தில் ஒரு அமைதியான இயல்புநிலையை உண்டுபண்ண புதிய அரசு உடன்நடவடிக்கைகளை எடுக்குமென நாம் எதிர்பார்க்கிறோம்'

இவ்வாறு விடுதலைப் புலிகளின் தலைமைப்பீட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ரணில் தலைமையிலான புதிய சிறீலங்கா அரசு இதற்கு சாதகமான முறையில் நடந்துகொண்டால், ஒரு மாதகால போர் நிறுத்தத்தை தொடர்ந்து நீடிப்பது குறித்தும் விடுதலைப் புலிகள் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றனர்.



தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்.

'எமது நல்லெண்ண முயற்சிக்கு ஆக்கபூர்வமான பதில் நடவடிக்கைகளை எடுத்து, போருக்கு ஓய்வுகொடுத்து, பொருளாதாரத் தடைகளையும் மற்றும் கட்டுப்பாடுகளையும் இப்புதிய அரசு அகற்றிவிடுமானால் எமது போர் நிறுத்தத்தை மேலும் நீடிப்பதுபற்றி நாம் பரிசீலனை செய்வோம்' இவ்வாறு விடுதலைப் புலிகளின் தலைமைப் பீட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்ச ஒரு மாதகால போர்நிறுத்தத்தை வரவேற்ற ரணில் தலைமையிலான புதிய சிறீலங்கா அரசு, அடுத்த இரு தினங்களில் தன்பங்கிற்கும் போர்நிறுத்த அறிவித்தலைச் செய்துள்ளது. விடுதலைப் புலிகள் அறிவித்த ஒரு மாதகாலத்திற்கு தாமும் போர்நிறுத்தத்தை கடைப்பிடிப்பதாக சிறீலங்கா அரசு அறிவித்திருக்கின்றது.

இதன்மூலம் சமாதான முன்னெடுப்பில், ஒரு படியை எடுத்து வைத்திருக்கின்றது ரணில் அரசு.

சமாதானத்தை ஏற்படுத்தத் தேவையான ஏனைய நடவடிக்கைகளை மேற்கொண்டு, சமாதானப் பேச்சுவார்த்தைக்கான புறநிலையை ஏற்படுத்தி, முன்னைய சந்திரிகா அரசால் முடக்கப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகளை ரணில் அரசு மீண்டும் தொடர வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது.


மருத்துவ மனம் 06

மீண்டும் பூர்வீகக் கிராமத்துக்கு வருகை 10

ஊர் முற்றம் 12


புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# சமாதானக் களத்தில் புதிய அரசின் ஒவ்வொரு அசைவும் அவதானிப்பிற்குரியது

சமாதானப் பேச்சுவார்த்தை பற்றிய பேச்சுக்கள் மீண்டும் அடிபட ஆரம்பித்திருக்கின்றன. நல்லெண்ண முயற்சியாக விடுதலைப் புலிகள் அறிவித்த ஒருதலைப்பட்ச ஒரு மாதகால போர்நிறுத்த அறிவித்தலும், அதற்குப் பதில்நடவடிக்கையாக சிறீலங்கா அரசும் ஒரு மாதகால போர்நிறுத்தத்தை அறிவித்திருப்பதும் இலங்கைத்தீவில் சமாதானம் ஏற்பட வாய்ப்புகள் தோன்றுவதான நம்பிக்கைகளை மீண்டும் ஒரு முறை ஏற்பட்டிருக்கின்றன.

1994ம் ஆண்டு சமாதானத்தின் பேரால், மக்கள் ஆணையைப் பெற்று ஆட்சிபீடம் ஏறிய சந்திரிகா அரசு, மக்கள் ஆணையை அவமானப்படுத்தி நிராகரித்து, பாரிய போர் நடவடிக்கையை தொடுத்து, அழிவையும் அவலத்தையும் ஏற்படுத்தியதென்பது மக்கள் மனங்களில் பதிவாகியிருக்கும் கசப்பான அனுபவம்.

இந்த அனுபவம் மீண்டும் ஒருமுறை ஏற்பட்டுவிடுமோ என்ற சந்தேகம் தமிழ் சிங்கள மக்கள் மத்தியிலும், சமாதான ஆர்வலர்கள் மத்தியிலும் ஏற்படவே செய்கின்றது. இருந்தபோதும், விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவித்தலுக்கு சாதகமான முறையில் ரணில் விக்கிரமசிங்கா அரசு நடந்து கொண்டிருப்பதாகவே பொதுவான கருத்து நிலவுகின்றது.

சமாதான நம்பிக்கைகள் ஒருபுறம் துளிர்க்க, ரணில் விக்கிரமசிங்காவின் இந்தியப் பயணம், மற்றும் சமாதான முயற்சியில் இந்தியாவின் அதிக பங்களிப்பை அல்லது தலையீட்டை புதிய அரசு கோருதல் என்பன, சமாதானக் களத்தில் புதுவிதமான சந்தேகங்களை கூடவே தோற்றுவித்திருக்கின்றன.

இந்தியாவின் பங்குபற்றுதலை அல்லது தலையீட்டை அதிகபட்சம் கோருதல் என்பது, இதுகால வரை விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசிற்கும் இடையே சமாதான ஏற்பாட்டாளராக செயற்பட்ட நோர்வே அரசை ஓரங்கட்ட எடுக்கப்படும் முயற்சியா? என்பது குறித்த சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியிலும் சமாதான ஆர்வலர்கள் மத்தியிலும் இயற்கையாகவே எழுந்துள்ளது.

தமிழ்மக்களைப் பொறுத்தவரை, தமிழ் சிங்களப் பிரச்சினையில் மத்தியத்துவம் வகிக்கும் தகுதியை இந்தியா தானாகவே இழந்துகொண்டுள்ளது என்ற கருத்து நிலவுகின்றது.

தமிழ்மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முறியடிக்கும் வகையில், அமைதிப்படை என்ற பெயரிலான இந்திய இராணுவத் தலையீடு இருந்துள்ளது என்பதை, இந்திய இராஜதந்திரிகளும், சிறீலங்காவின் முன்னாள் ஆட்சியாளர்களும் காலம்கடந்து தற்போது பகிரங்கப்படுத்தும் உண்மை.

இலங்கைத்தீவில் ஏற்படும் தீர்வு பல்லினங்கள் வாழும் இந்தியாவில், உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளைக் கிளறிவிடும் என அச்சப்படும் இந்திய அரசு, தமிழ்மக்களின் உரிமைகள் வழங்கும் விடயத்தில் மட்டுப்படுத்தப்பட்ட எல்லைவரையே அதன் விரிவாக்கம் அமையவேண்டும் என்பதில் கண்ணாக இருக்கின்றது என்று அறியப்படுகின்றது.

தமிழ்மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வீச்சை, ஒரு எல்லைக்குள் முடக்குதல் என்ற வகையிலான இந்திய அரசின் நிலைப்பாடும், விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் இட்டதுடன், ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின்பால் தமிழக மக்கள் கொண்டுள்ள ஆர்வம் அக்கறைகளை மழுங்கடிக்கச் செய்கின்ற அதன் முனைப்பு, சிறீலங்கா அரசின் தமிழ்மக்கள் மீதான போர்முனைப்புகளுக்கு, மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் புரிந்துவரும் உதவிகள் என்பன இந்தியா மீதான பலத்த சந்தேகத்தை தமிழ் மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளன.

ரணில் விக்கிரமசிங்காவின் இந்தியா தொடர்பான நடவடிக்கைகள், கோரிக்கைகள் என்பன, ஆரம்பத்திலேயே ஒருவித சந்தேகக் கோட்டை ஏற்படுத்தியுள்ளதென்றே கூறமுடியும். விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்தபின்னரேயே பேச்சுவார்த்தை என, முதல்நாள் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் தெரிவித்த சிறீலங்காவின் புதிய வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ மறுநாள் அக்கூற்றை மறுத்து செய்தி வெளியிட்டிருப்பதும் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தவே செய்திருக்கின்றது.

அத்துடன், சந்திரிகாவின் கூட்டாளிக்கட்சியாகவும் கூலிக்குழுவாகவும் இருந்து செயற்பட்ட ஈ.பி.டி.பியின் ஆயுதக்களைவு விடயத்தில், புதிய பாதுகாப்பமைச்சர் திலக் மாரப்பனவின் அறிவித்தலும் சமாதான நம்பிக்கைகள்மீது பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

'யாழ் குடாவில் அரசாங்கப்படைகளுடன் சேர்ந்து போரிடும் ஈ.பி.டி.பி. போன்ற ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்படமாட்டாது, அதற்கான திட்டம் தம்மிடம் இல்லை' இவ்வாறு, சிறீலங்காவின் பாதுகாப்பமைச்சர் திலக் மாரப்பன இவ்வாரம் பி.பி.சி. சிங்களச் சேவைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருக்கின்றார்.

ஈ.பி.டி.பி. போன்ற கூலிக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்படமாட்டாது என்பதுடன், அவர்கள் ஆயுதங்களுடன் குடாநாட்டில் நடமாட அனுமதிக்கப்படுவர் என்று அவர் தெரிவித்திருப்பதும் இக்கட்டத்தில் உன்னிப்பாக நோக்கப்படுகின்றது.

ஈ.பி.டி.பி. கூலிக்குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும், ரணில் விக்கிரமசிங்காவும் உதவியாளர்கள் எவரையும் அருகில் வைத்துக்கொள்ளாமல் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னராக இந்த அறிவித்தல் வந்திருக்கின்றது.

எதிர்கால நோக்கத்துடன், ஈ.பி.டி.பி. போன்ற ஆயுதக் குழுக்களை ஒருபுறம் பாதுகாத்து வளர்த்துவிடும் திட்டத்தை ரணில் விக்கிரமசிங்கா அரசு கொண்டுள்ளதா என்ற கேள்வியும் இத்தருணத்தில் எழவாய்ப்பிருக்கின்றது.

தமிழ்மக்களால் நிராகரிக்கப்பட்ட இக்குழுக்களை பாதுகாத்து வளர்த்துவிடும் திட்டமானது, தமிழ்மக்களின் தேசியப்பிரச்சினைக்கு தீர்வுகாண ரணில் விக்கிரமசிங்கா உளசுத்தியுடன் ஈடுபடுவார் என்ற நம்பிக்கையை வெகுவாகப் பாதித்திருக்கின்றது.

இந்தச் சமாதானப் பரபரப்பில், இருதரப்பு போர்நிறுத்தம் குறித்த தமது வரவேற்பை தெரிவித்த இந்திய அரசும் பிரித்தானிய அரசும், இப்பிரச்சினையில் மத்தியத்துவம் செய்யும் தமது விருப்பத்தை மென்மையான முறையில் வெளிப்படுத்தவே செய்கின்றன. இப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இருதரப்பும் கோரிக்கை விடும் பட்சத்தில் இந்தியா மத்தியத்துவ முயற்சியில் ஈடுபட வாய்ப்பிருப்பதாக சிறீலங்காவிற்கான இந்தியத் தூதுவர் தன்னைச் சந்தித்த தமிழ்க்கட்சி ஒன்றின் உறுப்பினரிடம் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை தொடர்பான இந்தியாவின் முன்னைய அனுபவங்கள் மற்றும் இந்தியா சந்தித்துவரும் உள்நாட்டு நெருக்கடிகள், பாகிஸ்தானுடனான முறுகல் நிலை என்பன இந்தியா இலங்கைப் பிரச்சினையில் அக்கறை செலுத்தும் வாய்ப்பை வழங்கவில்லை என்ற போதும், இலங்கை இனப்பிரச்சினையில் தீர்வு முயற்சியின்போது காத்திரமான பாத்திரமொன்றை வகிக்க அது இயல்பாகவே பிரியப்படுகின்றது என்ற கருத்து நிலவுகின்றது.

பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜக் ஸ்ரோவும், தற்போதைய இருதரப்பு சமாதான நகர்வை வரவேற்றிருக்கின்றார். சமாதான முயற்சிகளை மீண்டும் தொடர இது ஒரு அற்புதமான சந்தர்ப்பம் என விபரிக்கின்றார் அவர். அனைத்துத் தரப்பினரதும் அபிலாசைகளைத் திருப்திப்படுத்தும் வண்ணம் சமாதானப் பேச்சுவார்த்தையூடான தீர்வுக்கு தமது அரசு பரிபூரண ஆதரவு வழங்கும் எனவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

இரு தரப்பும் கோரும் பட்சத்தில் இந்தச் சமாதான முயற்சிக்கு உதவிசெய்ய தாம் தயாராக இருப்பதாகவும் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் ஜக் ஸ்ரோ அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

தமிழ்மக்களின் தேசிய விடுதலைப் படையான விடுதலைப் புலிகள் அமைப்பை சர்வதேச பயங்கரவாதப் பட்டியலில் இட்டு, தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை அவமதித்து, சிங்களப் பேரினவாத சக்திகளின் தமிழர் விரோதப் போக்கிற்குப் பலம் சேர்க்கும் நடவடிக்கையை மேற்கொண்ட நாடுகள் இத்தகைய விருப்புக்களைக் கொண்டிருப்பது, தமிழ் மக்களால் புரிந்துகொள்ளமுடியாத புதிராகவே இருக்கின்றது.

தமிழ்மக்களின் தேசிய விடுதலைக்கு எதிராக சர்வதேச நாடுகள் மேற்கொண்ட இத்தகைய நடவடிக்கைகள், சந்திரிகா அரசின் போர்க்கொள்கைக்கு வலுச் சேர்த்ததும், சமாதானத்தை முடக்கி, அதனைத் தோல்வியுறச் செய்ய சந்திரிகா அரசுக்கு ஊக்கம் கொடுத்ததும் அண்மைய வரலாறுகள்.

இலங்கைத்தீவில் சமாதானத்திற்கான புதியதொரு சூழல் தோன்றியிருக்கும் இன்றைய காலகட்டத்தில், முன்னைய தமது தவறுகளைத் திருத்திக்கொள்ள இந்த சர்வதேச சமூகம் முன்வருமா என்ற கேள்வியும் எழுகின்றது.

தமிழ் சிங்கள தேசிய இனங்களைச் சமனாகப் பாவித்து, சிங்களப் பேரினவாத அடக்குமுறையில் இருந்து, தமிழீழ மக்களை காக்கவும் மீட்கவும் உருப்பெற்ற விடுதலைப் புலிகள் அமைப்பை தமிழீழ மக்களின் தேசிய விடுதலைக்கான அமைப்பாக ஏற்றுக்கொண்டு, மத்தியத்துவம் வகிக்கும் தமது தகுதியை வளர்த்துக்கொண்டு, இத்தகைய நாடுகள் மத்தியத்துவம் செய்வதற்கான தமது விருப்பை வெளியிடுவதே பொருத்தமாக இருக்கும் என்பது தமிழ்மக்களின் கருத்தாக இருக்கின்றது

# நுணுக்குக் காட்டி

**'தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்காக நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அரசாங்கத்திற்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும்'**

*யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ், கைதடியில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில்.*

**'விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சர்வதேச மூன்றாம் தரப்பின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும். அவ்வாறான பேச்சுவார்த்தைக்கு உதவுமுகமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது இலங்கையில் விதிக்கப்பட்டுள்ள தடையை உடனடியாக நீக்க வேண்டும்'**

*தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் முதலாவது பாராளுமன்றக் கூட்ட அறிக்கையில்*

**"புதிய பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தில் இலங்கைத் தமிழர் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்படாவிட்டால் அடுத்த பாராளுமன்றத்திற்கு தன்மானமுள்ள தமிழன் எவனும் வரமாட்டான்"**

தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவின் தலைவர் திரு.இரா.சம்பந்தன் புதிய பாராளுமன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில்.

# இனவாத வேர்கள்



நடந்து முடிந்த சிறீலங்காவின் பொதுத் தேர்தலில், காவியுடை தரித்த பௌத்த பிக்கு ஒருவரும் பாராளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டிருக்கின்றார். சிறீலங்காவின் பாராளுமன்ற வரலாற்றில் இது முதன் முறையாக நடைபெறும் சம்பவம் ஆதலால், பௌத்த [illegible]வின் பாராளுமன்றப் பிரவேசம் குறித்து காரசாரமான [illegible]குவாதங்கள் நிகழவே செய்கின்றன. சிங்களச் செய்தி ஊடகங்களும் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, அச் செய்திகளைப் பிரசுரிக்கின்றன.

காலி மாவட்டத்தில் பொதுசன ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற வண. பத்தேகம சமித்த தேரரே, ஏனைய பௌத்த பிக்குகளின் கடுமையான எதிர்ப்பையும் காரசாரமான கண்டனத்தையும் பெற்று வருகின்றார்.

[illegible]ப் பத்தேகம சமித்த தேரர் பாராளுமன்றம் செல்வது இருக்கட்டும், ஆனால், பௌத்த பிக்கு அல்லாத சபாநாயகரை அவர் எவ்வாறு தலைவணங்கி மதிப்பைத் தெரிவிக்க முடியும் என்று கேள்வி எழுப்புகின்றார் வண. முடிகே பஞ்ஞானசீக என்ற தேரர்.

சரி... பாராளுமன்ற விதிகளின்படி, அவர் அப்படியே எழுந்து நின்று தலைவணங்கி சபாநாயகருக்கு மதிப்பளிப்பாராக இருந்தால், அவர் மாத்திரம் அவமானப்படவில்லை, அவர் மாத்திரம் அசௌகரியப்படவில்லை... பௌத்த சாசனத்துக்கே அவமானம் என்கிறார் அவர்.

இன்னொரு முக்கியமான பௌத்த தேரரோ... பாராளுமன்றத்திற்குச் செல்லும் பத்தேகம சமித்த தேரர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கு எப்படி வாக்களிக்கப்போகின்றார் எனக் கேள்வியெழுப்புகின்றார். அதாவது, உயிர்க்கொலையை மறுக்கும் பௌத்த மதத்தைச் சேர்ந்த பத்தேகம சமித்த தேரர்... பாராளுமன்றத்தில் மீன்பிடித் தொழில் செய்வோருக்காக வலைகள் வழங்கும் தீர்மானத்தின்பேரில் எவ்வாறு வாக்களிப்பார் என்று கேட்கின்றார் அவர்.

இதில் வேடிக்கையான வேதனை என்னவென்றால்.... மீன்களைக் கொல்லும் மீன்பிடித் தொழிலுக்கு அரசு வழங்க இருக்கும் உதவித்திட்டங்களுக்கு ஒரு பௌத்த பிக்கு எவ்வாறு வாக்களிப்பார் எனக் கேட்கத் தோன்றிய, மேன்மை தங்கிய அந்தப் பௌத்தத் துறவிகளுக்கு... தமிழ்மக்களுக்கெதிரான போருக்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நிதியொதுக்கீட்டுக்கு எவ்வாறு வாக்களிப்பார் தேரர் எனக் கேட்க மறுப்பதுதான்.

இச்சந்தர்ப்பத்தில் இன்னொரு விடயமும் இங்கு நினைவுகூரத்தக்கது.

பல மாதங்களுக்கு முன்னராக இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்க்கும் பெரும் பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டது. இந்த இராணுவச் சேர்ப்பிற்காக, பெரும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. சிங்களப்பகுதிகளில் பௌத்த பிக்குகள் கூட இந்த இராணுவத்திற்கு ஆட்கள் சேர்க்கும் பிரச்சாரத்தில் மும்முரமாக ஈடுபட்டனர்.

இதைவிட முக்கியமானது என்னவெனில்... இராணுவத்தில் பௌத்த பிக்குகள் பலர் இணைந்துகொண்டதுதான்.

இராணுவ ஆட்சேர்ப்பின்போது, நேர்முகத் தேர்வில் தோற்றிய பௌத்த பிக்குகளின் புகைப்படங்கள் பல சிங்களப் பத்திரிகைகளிலும் ஆங்கிலப் பத்திரிகைகளிலும் முன்பக்கத்தில்... அட்டகாசமாக பிரசுரிக்கப்பட்டன.

காவியுடை தரித்த ஒரு துறவிக்கு இருக்கக்கூடிய வீரஉணர்வும் தேசப்பற்றும் உனக்கேன் இல்லை என சாதாரண சிங்கள இளைஞனைக் கேட்கும் விதமாய்... அவை பிரசுரிக்கப்பட்டன.

இராணுவத்தில் பிக்குகள் இணைந்து கொள்வதை பெருமையாகவும், தேவையாகவும் சிங்களம் கருதுகின்றது.

இங்கே, காவி களைந்து... இராணுவச்சீருடை தரிப்பதையோ... ஜீவகாருண்ணியம் போதிக்கும் பௌத்த பிக்கு துப்பாக்கி ஏந்தி தமிழர்களைச் சுட்டுவீழ்த்தப் புறப்பட்டதையோ யாரும் பௌத்த சாசனத்துக்கு ஏற்பட்ட இழுக்காகக் கருதவில்லை.

இராணுவத் தளபதிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் அவர் தெரிவிக்கப்போகின்ற இராணுவ மரியாதை, பௌத்தத்திற்கு ஏற்பட்ட அவமரியாதையாக அவர்கள் கருதவில்லை.

இனவாதத்தின் வேர்கள் எங்கெல்லாமோ ஓடியிருக்கின்றன.

# அறிவாளிப் பொய்யர்கள்



அண்மையில், கொழும்பில் இருந்து வெளிவரும் தி ஐலன்ட் என்ற சிங்களப் பேரினவாதப் பத்திரிகை ஒரு செய்தியைப் பிரசுரித்திருந்தது.

இப்படியான பத்திரிகைகள் பிரசுரிக்கின்ற செய்திதான் என்றாலும், அந்தப் பத்திரிகை மக்களிடையே செல்வதற்கு முன்னராக அதில் வந்த செய்தி ஆதாரமற்று அடிபட்டுப்போனதுவும், அச்செய்தியை வழங்கிய சிங்கள அறிவாளி அவமானப்பட்டுப் போனதும்தான் சுவையானது.

சிறீலங்காவின் முன்னாள் தூதுவராகவும், வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கும் நந்தா கொடகே என்பவர், பாங்கொக்கில் நடைபெற்ற மாநாடொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், இந்தியப் பாராளுமன்றம் மீதான தாக்குதலை விடுதலைப் புலிகளே மேற்கொண்டனர் எனக் கூசாமல் பொய்சொன்னார்.

இந்தியப் பாராளுமன்றக் கட்டட வளாகத்தினுள் புகுந்து தாக்குதல் நடத்திய தற்கொலைப்படையினர் விடுதலைப் புலிகள்தான் என, அவர் தெரிவித்தார். விடுதலைப் புலிகளால்தான் இவ்விதம் செயற்படமுடியும் எனவும், அவர் தெரிவித்தார்.

காஸ்மீரிகள் போன்ற தோற்றத்தில், நடத்தப்பட்ட தாக்குதல் இதுவென்று பொய்யுரைத்தார் அவர்.

இந்தியாவின் பிரதமர் உட்பட ஆளும்கட்சி எதிர்க்கட்சி என அனைத்துத் தரப்பும், இத்தாக்குதலுக்குப் பின்னணியில் பாகிஸ்தான் இருப்பதாகவும், பாகிஸ்தானில் தளமைத்திருக்கும் காஸ்மீர் தீவிரவாதிகளே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான்மீது இராஜதந்திரப் போர்தொடுத்திருக்கின்றது இந்தியா. அத்துடன், இராணுவ மோதலுக்கான வாய்ப்புகளையும் இருதரப்பும் அதிகரித்துவருகின்றன.

இத்தாக்குதல் தொடர்பாக இந்தியா பாகிஸ்தானுடன் போர்தொடுப்பதைத் தடுக்க முனையும் அமெரிக்கா, குற்றவாளிகளின் பட்டியலைக் கொடுத்தால், பாகிஸ்தான் அவர்களைக் கைதுசெய்து ஒப்படைக்கும் என வாக்குறுதி வழங்கியிருக்கின்றது அமெரிக்கா.

நிலைமை இவ்விதம் இருக்க, நடந்த அத்தாக்குதலுடன் விடுதலைப் புலிகளை முடிச்சுப்போட முற்பட்டிருக்கின்றார் நந்தா கொடகே. அத்துடன் நின்றுவிடாமல்... காஸ்மீர் மற்றும் ஆப்கானிஸ்தான் பயங்கரவாதிகளுடன் புலிகளுக்கும் தொடர்பு உண்டு எனவும் அந்த ஓய்வுபெற்ற இராஜதந்திரி சிறீலங்கா இராஜதந்திரிகளின் அசத்தல் பாணியில் பேசினார்.

என்னதான் பொய்யைக் கக்கினாலும் உண்மைகள் ஒருநாள் வெளிவருவது தவிர்க்கமுடியாதது. ஆனால் கொடகே விடயத்தில் பொய்மைக்கு முன்னால் உண்மை வெளிப்பட்டிருக்கின்றது. உண்மைகள் வெளிப்படும்போது இத்தகைய அறிவாளிப் பொய்யர்கள் அவமானப்படுகின்றார்கள் என்பது உண்மைதான். ஆனால், அதைவிட இத்தகையவர்கள் சிங்களத்தை அவமானப்படுத்துகின்றார்கள் என்பதுதான் முற்றிலும் உண்மை.

# ஆயுதப்படையா? அரசியல் கட்சியா?

விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச போர்நிறுத்த அறிவித்தலை அநேகமாக அனைத்துத் தரப்பும் வரவேற்றிருக்கின்றன. சர்வதேச அரங்கிலும் இவ்வறிவித்தலுக்கு தகுந்த வரவேற்பு இருப்பதாகவே தோன்றுகின்றது. இந்தியா பிரிட்டன் ஆகிய நாடுகள் வெளிப்படையாக தமது வரவேற்பை தெரிவித்துள்ளன.

ரணில் விக்கிரமசிங்கா அரசு, விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவித்தலை வரவேற்பதுடன் நின்றுவிடாது, அதற்கு சாதகமாக தானும் ஒருமாதகால போர்நிறுத்த அறிவித்தலைச் செய்திருக்கின்றது.

கடந்த ஆண்டு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட போர்நிறுத்தத்தை ஏளனம் செய்து, எள்ளிநகையாடி நிராகரித்த, பொதுசன ஐக்கிய முன்னணியின் பிரதான கட்சியான சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் இதனை வரவேற்றிருக்கின்றது. மக்கள் தந்த தீர்ப்பும், யதார்த்தத்தின் போக்கும் அவர்களை இவ்விதம் பணித்திருக்கக்கூடும். 'புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது' என சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைத்திரிபால சேனநாயக்கா தெரிவித்திருக்கின்றார்.

விடுதலைப் புலிகளின் முன்னைய போர்நிறுத்த அறிவித்தலை, போலி நாடகம் எனவும், உலகை ஏமாற்ற மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை எனவும் வர்ணித்த முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரோ, உள்நோக்கத்துடனோ என்னவோ, 'இது நல்ல முன்னேற்றம். இந்த நடவடிக்கை வெற்றியளிக்கும் என நம்புகின்றேன்' எனத் தெரிவித்திருக்கின்றார்.



ஒருதலைப்பட்ச போர்நிறுத்தமாக ஆரம்பித்து தற்போது இருதரப்புப் போர்நிறுத்தமாக விரிவடைந்திருக்கும் தற்போதைய சமாதான சூழலால், ஜே.வி.பி. மற்றும் ஈ.பி.டி.பி. ஆகிய இரு சக்திகள் மாத்திரம் புளுங்கிப்போயுள்ளன.

இனவாதக் கட்சியாக தன்னை வேகமாக வளர்த்துவரும் ஜே.வி.பி. இதுவிடயத்தில் அதிருப்தி கொண்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் போர்நிறுத்தம் அறிவித்தால் அறிவித்துவிட்டுப் போகட்டும். அரசு, அதற்காக யுத்தநிறுத்தம் அறிவிக்கவேண்டியதில்லை எனத் தெரிவிக்கின்றார் ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலர் விமல் வீரவன்ச. அது நல்ல நகர்வும் அல்ல என அவர் அரசை எச்சரிக்கின்றார்.

இந்தச் சமாதான நகர்வை தனக்குச் சாத-கமாக்கி இனவாதப் பிரச்சாரம் மேற்கொண்டு, பேரினவாதச் சக்திகளின் ஆதரவைப் பெற்று தனது வாக்குவங்கியை நிரப்பிக்கொள்ள ஜே.வி.பி.முயல்வதாகவே இதன்மூலம் கருதமுடியும்.

ஈ.பி.டி.பி.யோ.. இந்தப் போர்நிறுத்த அறிவிப்பால் அதிருப்தி அடைந்திருக்கின்றது என்பதற்குப் பதிலாக அச்சமடைந்திருக்கின்றது என்றே சொல்லலாம்.

விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் போர்நிறுத்தம் செய்துகொண்டிருப்பது நல்லதுதான் என்று தெரிவிக்கும் ஈ.பி.டி.பி., 'யுத்தம் அழிவுகளையும் இழப்புக்களையும் மட்டுமே தரவல்லது. சமாதானம் நிம்மதியான, அமைதியான வாழ்வையும் ஆக்கபூர்வமான அபிவிருத்தியையும் தரக்கூடியது' என உபதே-சிக்கவும் செய்கின்றது.

அத்துடன் நின்றுவிடாது, படையினருடன் மோதல் தவிர்ப்பை மேற்கொள்ளும் விடுதலைப் புலிகள் தங்களுடனும் புரிந்துணர்வை ஏற்படுத்த முன்வரவேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றது.

சிங்களம் வழங்கும் ஆயுதங்களுடன் தமிழ்கட்சியாக அரசியல் நடத்தும், ஈ.பி.டி.பி கூலிக்குழுவிற்கு, இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான போர்நிறுத்தம், அச்சத்தையே ஏற்படுத்தும்.

அவர்கள் எப்போது ஆயுதங்களைத் துறந்து சாதாரணர் ஆகின்றார்களோ அப்பொழுதுதான் அவர்களுக்கு பாதுகாப்பு. இல்லாதவிடத்து, ஆயுதம் தரித்த அரசியல் கட்சி என்றதை விடுத்து, சிங்களப்படையின் ஒரு அங்கமாகவே தம்மை பிரகடனம் செய்யும்போது, போர்நிறுத்த காலங்களிலாவது அவர்களும் பாதுகாப்பை தேடிக்கொள்ள வாய்ப்பிருக்கின்றது..

# உண்மை பேசுகின்றார் சரத்முனசிங்கா

ஜெயசிக்குறுா இராணுவ நடவடிக்கையின்போது, மூவாயிரத்து எண்ணுாறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்ற தகவல் தற்போது, சிங்களத்தின் தரப்பால் வெளியிடப்பட்டிருக்கின்றது. அதனை வெளியிட்டிருப்பவர் முன்னாள் இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்கா.

சிங்களத்தின் 'ஜெயசிக்குறுா' இராணுவ நடவடிக்கை தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மறக்கப்படமுடியாத ஒரு இராணுவ நடவடிக்கை. 1987ம் ஆண்டு மே மாதத்தில் ஆரம்பித்து, 1998ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரைப்பட்ட சுமார் ஒன்றரை ஆண்டுகள் தொடர்ந்த கொடிய மோதல்களமாக விரிந்த 'ஜெயசிக்குறுா' இராணுவ நடவடிக்கை, விடுதலைப் புலிகளைப் போரியல் கலையில் புடம்போட்டு எடுத்த இராணுவ நடவடிக்கை என்றால் மிகையாகாது. அதே போன்று, விடுதலைப் புலிகளின் சளைக்காத தொடரான தாக்குதல்களால் சிதைந்து சின்னாபின்னமாகி, ஈற்றில் தோல்வியையே தழுவிக்கொண்ட சிங்களப்படைக்கு பெரும் மரணஅடியாகவும், விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக வெல்லமுடியாது என்ற பாடத்தைப் புகட்டிய வரலாற்று ஆசானாகவும் 'ஜெயசிக்குறுா' இராணுவ நடவடிக்கை அமைந்தது.

மறக்கப்படமுடியாத 'ஜெயசிக்குறுா' இராணுவ நடடிக்கைபோன்று, சிங்கள இராணுவ அதிகாரிகளில் மறக்கப்படமுடியாத ஒருவராக விளங்குபவர், ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சரத் முனசிங்கா. அண்டப்புளுகே அவரது சிறப்பம்சம்.

இராணுவப் பேச்சாளராக இருந்த அவர், ஜெயசிக்குறுா படைநடவடிக்கை தொடர்ந்த காலத்தில், விடுதலைப் புலிகளின் இழப்புக்குறித்து, கற்பனையாக அள்ளிவிட்ட கணக்குகள் கொஞ்சநஞ்சமல்ல.

அன்று, இராணுவப் பேச்சாளராக இருந்த அவர், ஜெயசிக்குறுா இராணுவ நடவடிக்கையில் இறந்த படையினரின் எண்ணிக்கையை சிலநுாறுகளாகவே தெரிவித்துவந்தார்.

இராணுவப்பேச்சாளராகவும் கட்டளையதிகாரியாகவும் பணியாற்றிய அவர் பின்னர் ஓய்வுபெற்று, துணைச் சபாநாயகராக சந்திரிகா ஆட்சியில் பதவிவகித்தார். தற்போது, ஐக்கிய தேசியக்கட்சிக்குத் தாவிய அவர், கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் போட்டியிட்டார்.

எதிர்க்கட்சிக்குத் தாவிய கையுடன், ஒரு இலக்கையும் அடையமுடியாமல் தோற்ற ஜெயசிக்குறுா இராணுவ நடவடிக்கையில் மூவாயிரத்து எண்ணுாறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்ற தகவலை பகிரங்கப்படுத்தினார். மேலிடத்து உத்தரவின்பேரில், கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்கள் களமுனையில் வைத்தே தகனம் செய்யப்பட்டன எனத் தெரிவிக்கின்றார் அவர்.

# புலிச்சாயம் பூசும் ஈ.பி.டி.பி.

சந்திரிகா ஆட்சிக்காலத்தில், சிங்கள ஆக்கிரமிப்புப்படை யாழ் குடாநாட்டை ஆக்கிரமித்துக்கொண்டபோது காணமல்போன பலநுாற்றுக்கணக்கானோரின் கதி இன்றுவரை தெரியவில்லை. 1996ம், 1997ம் ஆண்டு காலப்பகுதிகளில், குடாநாட்டில் பரவலாக சிங்களப்படையினரால் கைதுசெய்யப்பட்ட பொதுமக்களில் அறுநுாறுக்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். செம்மணிப் புதைகுழிகளில் இருந்து சிலரது சடலங்கள் தோண்டியெடுக்கப்பட்டபோதும், ஏனையோருக்கு என்ன நடந்தது என்பது குறித்த பெரும் மர்மம் நிலவிவருகின்றது.

காணாமல் போன தமது பிள்ளைகள், கணவர்மார்கள், உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறியும் குறிக்கோளுடன், 1996ம் ஆண்டு, காணாமல்போனோர் பெற்றார் பாதுகாவலர் சங்கம் உருவாக்கப்பட்டது.

மேற்படி சங்கத்தின் பிரதிநிதிகள், சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவுடன் நேரடியாகவே தொடர்புகொண்டு, தங்கள் பிள்ளைகளின் கணவர்மாரின் கதியென்ன என்பதை அறியத்தருமாறு கோரிக்கை விட்டனர். கைதுகளுக்கும் படுகொலைகளுக்கும் மனிதப் புதைகுழிகளுக்கும் முப்படைகளின் தலைமைத் தளபதி என்றமுறையிலும், முக்கியமான கட்டளைகளை வழங்கியவர் என்ற முறையிலும் பொறுப்பாக இருக்கும் சந்திரிகா இதற்குப் பதிலளிப்பார் என எதிர்பார்ப்பது அர்த்தமற்றது.

காணாமல்போனோர் குறித்து பதில்தருவதற்கு சந்திரிகா பல காலக்கெடுக்களை வாங்கிக்கொண்ட போதும், பதிலை மாத்திரம் வழங்கவில்லை.

காணாமல்போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கமும், அன்னையர் முன்னணியும் இணைந்து, முற்றுகைப் போராட்டங்களையும், உண்ணாவிரதப் போராட்டங்களையும் நடத்தியபோதும், சந்திரிகா அரசு அசைந்துகொடுக்கவில்லை. இறுதியாக, கைதுசெய்யப்பட்டு காணாமல் போனோரில் 167பேரின் விபரங்களை மாத்திரம் சிங்கள அரசு வெளியிட்டது. அந்த 167 பேரும் வன்செயல்களால் கொல்லப்பட்டனர் என சந்திரிகா அரசு அறிவித்தது. ஏனையோருக்கு என்ன நடந்தது என்பது குறித்து, இறுக்கமான மௌனத்தையே சந்திரிகா அரசு கடைப்பிடித்து வந்துள்ளது.

தமது முயற்சியில் சலிப்படையாத காணாமல்போனோர் பாதுகாவலர் சங்கமும் அன்னையர் முன்னணியும் கடந்த 24ம் திகதி, யாழ் செயலகத்தை முற்றுகையிட்டு மறியல் போராட்டம் நடத்தினர். தமது கோரிக்கைக்கு தகுந்த பதில் அளிக்குமாறு அவர்கள் விடுத்த கோரிக்கையை பரிசீலித்து விரைவில் பதில் வழங்குவதாக புதிய அரசு அறிவித்திருக்கின்றது.

ஆனால், தங்களின் உறவுகள் எங்கிருக்கின்றனர் என்ன ஆனார்கள் என அறியும் துடிப்புடன் போராட்டம் நடத்தும் இம்மக்களின் போராட்டத்தை, ஈ.பி.டி.பி. கூலிக்குழு புலிச்சாயம் பூசமுனைகின்றது. புலிகளின் நெறிப்படுத்தலில் புலிகளுக்காக நடத்தப்படும் போராட்டம் என்கிறது ஈ.பி.டி.பி.கூலிக்குழு.

# கதிரின் ஆசை

ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான புதிய அரசு அமைக்கப்பட்டிருக்கின்றது. தேசிய நல்லிணக்க அரசு அமைத்தல் என்ற பேச்சு, சந்திரிகாவின் ஒத்துழையாமையால் மௌனித்துப்போயுள்ளது. எனினும், பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பலரும், ரணிலின் தேசிய நல்லிணக்க அரசில் கலந்துகொள்ளும் ஆர்வத்துடனேயே இருக்கின்றனர். ஏ.எச்.எம்.பௌசி உட்பட முன்னாள் அமைச்சர்கள் பலரும் இதுவிடயத்தில் ஆர்வமாக இருக்கின்றனர். ரணில் விக்கிரமசிங்காவுடன் நேரடியாக பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டுவருகின்றனர். சந்திரிகாவிற்கு மிக நெருக்கமானவராக இருக்கும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமருக்கும் புதிய அரசில் பங்கேற்று, வெளிவிவகார அமைச்சராகவோ அல்லது வேறு உயர் பதவிகளையோ பெறும் ஆசையும் உள்ளூர இருப்பதாக சொல்லப்படுகின்றது.

சிங்கள செய்தி ஊடகங்கள், புதிய அரசு கதிர்காமரை வெளிவிவகார அமைச்சராக ஆக்கிக்கொள்ளவேண்டும் என்ற கருத்துக்களை வெளியிட்டுவருகின்றன. சிங்களத்திற்காக சர்வதேச அரங்கில் கதிர்காமர் ஆற்றிய பணியை சிங்களம் உச்சிமீது துாக்கிவைத்து புகழ்ந்து தள்ளுகின்றது.

ரணில் விக்கிரமசிங்காவின் தேசிய நல்லிணக்க அரலில் இணைந்துகொள்ள விருப்பம் தெரிவித்துள்ள கதிர்காமரின் நண்பரும், முன்னாள் அமைச்சருமான ஏ.எச்.எம்.பௌசி, விடுதலைப் புலிகளுடனான எந்தப் பேச்சுவார்த்தையிலும் லக்ஸ்மன் கதிர்காமரையும் புதிய அரசு இணைத்துக்கொள்ளவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

தேசிய அரசில் கதிர்காமரையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி, நாடுதளுவிய ரீதியில் போராட்டம் நடத்தப்போவதாகத் தெரிவிக்கும் பௌசி, சர்வதேச அரங்கில் சிறீலங்காவின் பெயரை உயர்த்திய கதிர்காமரை, இனப்பிரச்சினைக்கான தீர்வுபற்றிய பேச்சுவார்த்தைகளில் உள்ளடக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

சமாதான முன்னெடுப்பில் தனக்கிருக்கக்கூடிய அனுபவத்தை புதிய அரசுக்கு வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கும் கதிர்காமர், தனக்கு வெளிவிவகார அமைச்சர் என்ற ரீதியில் ஏழாண்டுகால அனுபவம் இருப்பதாகத் தெரிவிக்கின்றார்.

# செய்தி நறுக்குகள்

## பயிர்மேயும் வேலி

சிறீலங்காவின் முன்னாள் பாதுகாப்பமைச்சரின் இரண்டு புதல்வர்கள், கொலைச் சம்பவத்தில் தேடப்பட்டுவருவதால் தலைமறைவாகியிருக்கின்றனர். தேர்தல் தினத்தன்று கண்டியில் பத்து முஸ்லீம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாகவே இவர்கள் தேடப்பட்டுவருகின்றனர். ரத்வத்தையும் பொலிஸாரால் விசாரிக்கப்பட்டார். தனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என ரத்வத்தை தெரிவித்தாலும், ரத்வத்தையின் பேரில் கண்டிக்கு வரவழைக்கப்பட்ட இராணுவத்தினரே இதனைப் புரிந்திருக்கின்றனர். இதற்காகப் பாவிக்கப்பட்ட ரத்வத்தையின் அமைச்சரவை வாகனங்க இரண்டு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன தாக்குதலில் ஈடுபட்ட இராணுவத்தினர் பத்துப் சரணடைந்திருக்கின்றனர். தாக்குதலுக்குப் பா கப்பட்ட ஆயுதங்களும் இராணுவ முகாம் ஒன்று இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

## ரணில்-டக்கிளஸ்

சிறீலங்காவின் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், ஈ.பி.டி.பி. டக்கிளஸ் தேவானந்தாவும், 15.12.2001அன்று காலை சந்தித்துப் பேசிக் கொண்டனர். பேச்சுவார்த்தையின்போது, இ வரும், அருகில் உதவியாளர்கள் எவரையு வைத்துக்கொள்ளவில்லை.

## ஈ.பி.டி.பி. கைவரிசை

வடமராட்சியில் நெல்லியடியில், தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் அலுவலகம் 23.12.2001அன்று இரவு, ஈ.பி.டி.பி.யினரின் கைக்குண்டு வீச்சுக்கு இலக்கானது. அலுவலகம் சேதமடைந்தது யாரும் காயமடையவில்லை.

## போர்நிறுத்த ஆரம்பம்

மன்னார் பள்ளிமுனையில், கடந்த 24.12.2001 அன்று, போர்நிறுத்தம் ஆரம்பிப்பதற்கு சிலமணிநேரங்களுக்கு முன்னதாக, பொதுமக்களின் வீடுகளுக்குள் புகுந்த சிங்களப்படையினர், கண்டபடி சுட்டு விலையுயர்ந்த பொருட்களைச் சேதமாக்கினர். நாற்பத்தாறு பொதுமக்களை கைதுசெய்து, விசாரணைக்கென அழைத்துச் சென்றனர். பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். மறுநாள் நத்தார் பண்டிகை தினத்த றும் மக்களை, சிங்களப்படையினர் சோதனை செய்து பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாக்கினர். அதனை ஆட்சேபித்த தமிழ்க்கட்சி உறுப்பினர்களைத் தாக்கமுற்பட்டது சிங்கள இராணுவம்.

## மாயமாய் மறையும் ஆவணங்கள்

சந்திரிகா ஆட்சியின்போது, பாதுகாப்புச் செலவினங்கள் குறித்து பதியப்பட்டிருந்த பல ஆவணங்கள் தற்போது மாயமாய் மறைந்து போயுள்ளன. சந்திரிகா ஆட்சியில் பல முறைகேடுகள் நடந்துள்ளது நன்கு தெரியவருவதாக, தற்போதைய நிதியமைச்சர் கே.என்.சொக்சி தெரிவித்திருக்கின்றார். இந்த வருடத்திற்கான பாதுகாப்புச் செலவினம் தெரிவிக்கப்பட்டதைவிட பல மடங்கு அதிகம் எனத் தெரிவிக்கின்றார் அவர்.

## போராட்டத்தில் குதிப்போம்

வடமராட்சி மீனவர் சங்கம், புதிய அரசிற்கு ஒரு எச்சரிக்கையை விடுத்திருக்கின்றது. தமது மீன்பிடித்தல் உரிமையை தடுக்கும் இராணுவச் சட்டங்களை அகற்றி, சுதந்திரமாகத் தொழில் செய்து பிழைக்க தம்மை அனுமதிக்கவேண்டும் எனவும் இல்லாதுபோனால், மறியல் பேராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் அச் சங்கம் அறிவித்துள்ளது.

# மாறிவரும் அரசியல் காட்சிகள் விடுதலைப் போரில் திருப்புமுனை

சந்திரிகா அம்மையாரின் மிக நெருங்கிய அமைச்சரவைச் சகாவாக இருந்தவர் எஸ்.பி. திசநாயக்கா. ஐ.தே.கட்சிக்கு இடம்மாறியுள்ள இவர் அம்மையாரை ஒரு பொய்யர் என வர்ணித்துள்ளார்.

புத்திஜீவித் தலைவி என்று அம்மையார் போலியாகப் பெற்று வைத்திருந்த புகழுக்கு மேலும் பலம் சேர்த்தவர் பேராசிரியர். ஜி.எல்.பிரிஸ் கட்சி மாறிய இவர் அம்மையார் ஒரு சர்வாதிகாரி எனக் குற்றம் சாட்டியுள்ளார்.

அண்மையில் லண்டன் சென்றிருந்த அம்மையாரை செவ்வி கண்ட பி.பி.சியின் அரசியல் விமர்சக செய்தியாளர் ஒருவர், அம்மையாரது அரசின் மனித உரிமை மீறல்களையும், தமிழர்க்கெதிரான இனப்படுகொலை நடவடிக்கைகளையும் அம்பலப்படுத்தும் வகையில் கேள்விகளை எழுப்பி அம்மையாரைத் திணறடித்தார். உண்மைகளை ஏற்கமறுக்கும் நேர்மையற்ற அரசியல் தலைவர் அவர் என உலகின் முன் நிறுவினார்.

சமாதான தேவதை என்றும் மூன்றாம் உலக நாடுகளின் முன்னுதாரண ஆட்சியாளர் என்றும் உலக ஊடகங்களால் முன்னர் வர்ணிக்கப்பட்ட சந்திரிகா அம்மையாரின் பொறகாலம், இப்போது, முற்றுமுழுதாகவே அழிந்துவிட்டது.

அதற்குப் பதிலாக குறுகிய சிந்தையுடைய தீவிர வலதுசாரி அரசியல்வாதி என்றும், இனவெறி கொண்ட ஒரு இரும்புப் பெண்மணி என்றும் அம்மையாரை சர்வதேச சமூகம் நோக்கத் தொடங்கிவிட்டது.

கடந்த 50 வருடகாலமாக சிங்கள தேசத்தின் அரியணையை அலங்கரித்து வந்த தமிழர் விரோத ஆட்சியாளர்களைப்போலவே சந்திரிகா அம்மையாரும் சிங்கள மேலாதிக்கத்தை நிலை நிறுத்த முயன்ற ஒரு அபாயகரமான ஆட்சியாளராகவே உலகசமூகத்தால் இப்போது இனங்காணப்பட்டுள்ளார்.




அவரது ஏழுவருட ஆட்சியில் அம்மையாரின் சர்வாதிகாரப் போக்கையும், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களையும், மனித உரிமைகள் காலில் போட்டு மிதிக்கப்பட்டதையும், போதும் போதும் எனுமளவிற்கு, உலகம் கண்டுணர்ந்து விட்டது.

தலைவர் பிரபாகரன் கூறியது போல சந்திரிகா அம்மையாரின் ஏழு வருட ஆட்சிதான் தமிழ் மக்கள் சந்தித்த மிகக் கொடியகாலமாகும்.

இதுவரைகாலமும் அம்மையாரின் ஆட்சிமீது புலிகள் இயக்கமும் தமிழ் மக்களும் சுமத்திவந்த கடுமையான குற்றச்சாட்டுக்களை இப்போது அவரது அமைச்சரவைச் சகாக்களும் உலக ஊடகவியலாளர்களும் வெளிநாட்டு இராஜதந்திரிகளும் சுமத்தத் தலைப்பட்டுள்ளனர்.

1994இல் சமாதானத்தின் பெயரால் அம்மையார் பதவிக்குவந்தபோது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அவர் அமைதி வழியில் அரசியல் தீர்வுகாண்பார் என நம்பி, அவரின் ஆட்சிக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆதரவு தெரிவித்து வந்த தமிழ்க் கட்சிகள் (ஈ.பி.டி.பி. தவிர) இப்போது தமது தவறை உணர்ந்துள்ளன.

அதன்விளைவாக, புலிகள் இயக்கத்தையும், அதன் தீர்க்கதரிசனமான சொற்களையும், செயல்களையும் ஏற்றுக்கொண்டுள்ளனர். புலிகள் இயக்கம்தான் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்றும் ஏற்றுக்கொண்டுள்ளனர். தலைவர் பிரபாகரனை தமிழினத்தின் தேசியத் தலைவர் என்றும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சந்திரிகா அம்மையார் பற்றிய சர்வதேச சமூகத்தின் மனமாற்றமும், தமிழ் அரசியல் கட்சிகளின் புதிய நிலைப்பாடும் தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு மாபெரும் அரசியல் வெற்றியைப் பெற்றுக்கொடுத்துள்ளன.

25 வருடகால புலிகளின் ஆயுதப் போராட்ட வரலாற்றில் இது ஒரு மாபெரும் திருப்புமுனை எனக்கொள்ளலாம்.

இனப்படுகொலையை நோக்காகக் கொண்ட இனவெறி அரசுக்கெதிராக ஒரு மக்கள் போராட்டத்தை புலிகள் இயக்கம் நடாத்திவருகின்றது என்ற உண்மையை, இப்போது உலக சமூகம் உணரத் தொடங்கிவிட்டது.

அம்மையாரின் ஏழு வருட ஆட்சியில் சமாதானத்திற்கென புலிகள் இயக்கம் வழங்கிய இரண்டு பெரிய வாய்ப்புகளை (1994 இல், 2001 இல்) வேண்டுமென்றே நிராகரித்த அம்மை

**எல்லாளன்**

யார் இனப்போரை கூர்மையடையவைத்து இலங்கைத்தீவை என்றுமில்லாத அளவுக்கு இரத்தக் களறியுமாக்கியுள்ளார்.

புலிகள் இயக்கத்தை சமாதானத்தின் விரோதிகள் என்றும், போர்வெறியர்கள் என்றும் உலகிற்குக் கூறிவந்த அம்மையார் இப்போது அதே குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகி கீர்த்தியிழந்ததொரு ஆட்சியாளராகத் திகழ்கின்றார்.

சர்வதேச அரசுகள் மத்தியில் சந்திரிகா அரசாங்கம் சந்தித்துள்ள இத்தகைய அரசியல் கீர்த்தியிழப்பு சிறிலங்கா அரசுக்கு பொருண்மிய நெருக்கடிகளையும் கொடுத்துள்ளது.

இத்தகைய அரசியல் சூழலிலேயே சிறீலங்கா நாடாளுமன்றிற்கான பொதுத்தேர்தலும் நடைபெற்றுள்ளது. போர்ச்செலவுக்கு பொருண்மிய உதவிகள் கிடையாது என்ற உதவி வழங்கும் நாடுகளின் எச்சரிக்கையையும் பொருட்படுத்தாமல் அம்மையாரின் தலைமையிலான பொ.ஐ.முன்னணி தனது தேர்தல் பரப்புரையில் தாம் ஆட்சி அமைத்தால் புலிகளுக்கெதிரான போர் தொடரும் என்றே கூறிவந்தது.

மூன்றாம்தரப்பு மத்தியத்துவத்துடன் அமைதிப்பேச்சுக்களை நடாத்த புலிகள் இயக்கம் தயாராக இருக்கின்றபோதும் அதற்கான அரசியல் முன்னேற்பாடுகளைச் செய்து ஆக்கபூர்வமானவகையில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட சந்திரிகா அரசாங்கம் தொடர்ந்தும் மறுத்து வந்தது.

இந்தநிலையில், தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக புலிகள் இயக்கத்தின் அரசியல் நிலைப்பாடே மிகச் சரியான வழிமுறை என்ற உண்மையை இப்போது அனைத்துத் தரப்பினரும் உணர்ந்துவிட்டனர்.

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறவேண்டுமாயின் இந்த அரசியல் யதார்த்தத்தை தாமும் ஏற்றுக்கொண்டேயாகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தினுள் தமிழ் அரசியல் கட்சிகளும் வந்துள்ளன.

இதன்வெளிப்பாடே நான்கு தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு தேர்தல்கூட்டணியை உருவாக்க வேண்டிய சூழல் ஏற்பட்டதாகும்.

இந்த அரசியல் கூட்டணியானது தமிழரின் ஏக பிரதிநிதிகளாக புலிகள் இயக்கத்தை ஏற்றுக்கொண்டுள்ளதும், புலிகள் இயக்கம் மீது சிங்கள அரசு விதித்துள்ள தடையை நீக்க வேண்டும் என்று கோரியிருப்பதும், புலிகளுடன் மட்டுமே சிங்கள அரசு பேச்சுவார்த்தைகளை நடாத்தவேண்டும் என்று பிரகடனப்படுத்தியிருப்பதும் விடுதலைப் போராட்டத்தின் அரசியல் யதார்த்தத்தை உலக சமூகத்திற்கு தெட்டத் தெளிவாக்கியுள்ளன. ■

**அவரது ஏழுவருட ஆட்சியில் அம்மையாரின் சர்வாதிகாரப் போக்கையும், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களையும், மனித உரிமைகள் காலில் போட்டு மிதிக்கப்பட்டதையும், போதும் போதும் எனுமளவிற்கு, உலகம் கண்டுணர்ந்துவிட்டது.**

**கடந்த 50 வருடகாலமாக சிங்கள தேசத்தின் அரியணையை அலங்கரித்து வந்த தமிழர் விரோத ஆட்சியாளர்களைப் போலவே சந்திரிகா அம்மையாரும் சிங்கள மேலாதிக்கத்தை நிலை நிறுத்தமுயன்ற ஒரு அபாயகரமான ஆட்சியாளராகவே உலகசமூகத்தால் இப்போது இனங்காணப்பட்டுள்ளார்.**

# மருத்துவ மனம்

துாயவன்

**இடையிடையே கேட்கும் துப்பாக்கிச் சத்தங்களும் எறிகணை வெடிப்பதிர்வுகளும் அவன் எண்ண ஓட்டத்தைக் கலைக்க முயன்று தோல்வியைத் தழுவுகின்றன. பகல் முழுவதும் பதுங்கு அகழிகள் வெட்டியதாலும், நடுநிசி வரை எதிரிப் பிரதேசத்தினுள் மிதிவெடிகளை விதைத்ததாலும் ஏற்பட்ட களைப்புடன் படுத்திருக்கின்றான். எனினும் உறக்கம் அவனைத் தழுவ மறுக்கின்றது.**

காரணம் வலது மேற் கையில் இரண்டு நாட்களுக்கு முன்னர் ஏற்பட்ட சிறுகாயம், இப்பொழுது வலியை ஏற்படுத்துகின்றது. 'தம்பி பின்னால மெயினுக்குப் போயிற்று வாங்கோ, வேணுமெண்டால் நான் கடிதம் எழுதித்தாறன். அங்க வாணன் அண்ணாதான் டொக்ரராக நிற்கிறார். ரீட்மெண்ட் முடிய மீண்டும் இங்கு வரலாம்' சின்னக் காயத்திற்குப் பின்னால போகேலாது எனத் தான் அடம் பிடித்ததற்கு மேற்படி அங்கு இராணுவ மருத்துவராகப் பணியாற்றும் மதி அக்கா சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது. ஆனால் இப்போது கை வீங்கிச் சுள் சுள்ளென வலிக்கத் தொடங்கிவிட்டது.

இருபத்தியாறாம் திகதி குடாரப்பில் தரையிறங்கியதிலிருந்து விவரணத்திற்கு அப்பாற்பட்ட சமர்களை எதிர்கொண்டதால் இவனுள் ஏற்பட்ட உறுதியும், சில நூறு வீரர்கள் பல ஆயிரம் இராணுவத்தினரை ஊடறுத்து நிற்பதால் ஒவ்வொரு புலிவீரனதும் பணியினது முக்கியத்துவத்தை உணர்ந்திருந்ததாலும், தனது முடிவு சரியானதுதான் என எண்ணுகின்றான். எனினும் கிளிநொச்சிச் சண்டையில் ஏற்பட்ட காயத்தினால் உருமாறி பலமிழந்திருந்த மறுகையைப் பார்க்கையில் அவனும் சிறுபயம் எட்டிப் பார்க்கின்றது. 'இந்தக் கையுக்கும் ஏதாவது, நடந்தால்' என எண்ணுகையில் தனது உறுதி குலைந்துவிடுமோ என்னும் பயமும் ஏற்படுகின்றது. 'சீ என்ன இருந்தாலும் கண்டி வீதியால போய்த்தான் எங்கட ஆட்களைச் சந்திக்கிறது. எனத் தன்னை உறுதிப்படுத்திக் கொள்ளுகின்றான். A9 வீதியை ஊடறுத்து பகைவனை அச்சுறுத்தியவாறு இருக்கும் 800ரி இடைவெளியே கொண்ட எந்த நேரமும் பகைவனால் பூரண முற்றுகைக்குள்ளாக்கப்படக் கூடியதுமான ஆபத்துள்ள பிரதேசத்தினுள், பதுங்குகுழி ஒன்றின் அருகில்தான் அவன் படுத்திருக்கின்றான். இடையிடையே வானத்து நட்சத்திரங்களை மறைத்துச் செல்லும் மேகக் கூட்டங்களை ஊகித்துப் பார்த்தவன், களத் தாய் மடியில் கண் வளருகின்றான். அவ்வேளை 'கும் ஸ்ஸ படீர்' எனச் சுத்தமிட்டு வந்த எதிரியின் எறிகணையொன்று அருகிலுள்ள மரத்தில் மோதி வெடிக்கின்றது. கந்தகக் கரும் புகையும், மணமும், காரிருளும் கலந்து பேயாடு களமொன்றைப் பிரசவிக்கின்றது. எறிகணைச் சிதறல்களால் இவனது இரண்டு கால்களும் தொடையுடன் துண்டிக்கப்படுகின்றன. அவன் சுயநினைவை இழக்கின்றான்.

ட்றக்ரர் ஒன்று இரைந்து வரும் சத்தங் கேட்டு, அவள் கண்விழிக்கின்றாள். 'அக்கா அக்கா காயம்! என் அருகில் நின்ற போராளி சற்று உரமாகக் கூறவும், ட்றக்ரர் அருகில் வந்து நிற்கவும் சரியாக இருந்தது. இச்சையின்றியது செயல் போல் உடனே எழுந்த அவள் ரோச் வெளிச்சத்தில் ட்றக்டர் பெட்டியில் இருக்கும் காயக்காரனைப் பார்க்கின்றாள். இரண்டு தொடை நாடிகளும் அறுந்துவிட்டன. சரியாகக் கட்டுப் போடப்படவில்லை. இரத்தம் அதிகமாக வெளியேறுகின்றது. சில நிமிடங்களுள் செயற்படா விட்டால் அவன் உயிர் தங்குவது அரிது. மேற்கண்டவாறுதன் மனதினுள் எண்ணியவள், 'கெதியா கெதியா இறக்குங்கோ' என கூறும் அவள் குரலில் நிலைமையின் விபரீதத்தைப் பிரதிபலிக்கும் தொனி தென்படுகின்றது. கீழே அவனை இறக்கியவுடன் இரத்தப் பெருக்கைக் கட்டுப்படுத்தும் முகமாக இரண்டு தொடைகளினதும் மேற்பகுதியில் தனது இருகைப் பெருவிரல்களாலும் குறித்த நாடிகளின் அமுக்கப் புள்ளிகளில் அழுத்திய வண்ணம் தொடர்ந்து செய்யவேண்டியவற்றைச் செய்கின்றாள். 'கெதியா இரண்டு கையிலயும் வென்புளோன் போடுங்கோ. காட்மன்ஸ் லோட்பண்ணுங்கோ, டீரீக்கு பிளட் எடுங்கோ' என காயத்தையும், நோயாளியையும் அவதானித்த வண்ணம், கூறுகின்றாள். 'அக்கா வெயின் பிடிபடுகுதில்லை' என்ற குரலுக்கு 'இஞ்ச வா இதை பிடி' என அவனைக் கூப்பிட்டு நாடிகளை அழுத்தச் சொல்லிவிட்டு, 'கட்டெளவுன் செற்றைத் தாங்கோ' எனக் கேட்கவும் உரிய ஆயுதங்கள் அவள் கையில் கொடுக்கப்படுகின்றது. 'ரோச்சை இஞ்ச பிடியுங்கோ' எனக் கூறியவாறு நோயாளியின் முன்கையில் குறுக்காகத் தோலை வெட்டி நாளத்தைக் கண்டுபிடித்து அதில் சிறு துவாரமிட்டு வென்புளோனை அதனூடாக உட்செலுத்தி அது வெளியே நழுவாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் முகமாக உரிய முறையில் கட்டுகள் போட்டு, 'சிரின்ஞ்' ஒன்றினுள் குருதியை எடுத்து 'டீ.ரீ. செய்யுங்கள்' என அருகில் நின்ற போராளியிடம் கொடுக்கின்றாள். தயார் நிலையில் இருந்த 'சாட்மன்ஸ்' திரவ ஊடகத்தை உரிய குழாயை வென்புளோனில் பொருத்தியதன் மூலம் பிழிந்து வேமாக உட்செலுத்துகின்றாள்.





அதனைத் தொடர்ந்து செய்யுமாறு இன்னொருவரிடம் ஒப்படைத்துவிட்டு 'ஆட்றி (f) பொசெப்ஸ் ரெண்டு தாங்கோ?' எனக்கேட்டு அவ் வுபகரணங்களை வேண்டியவள் '0.6 MG அற்றோபினும் 50MG கெற்றமினும் கொடுங்கள்' எனக்கூறியவாறு நோயாளியின் காற்பகுதியில் வந்து அமருகின்றாள். ஒவ் வொன்றாக சற்று விட்டுத்தா' என இவள் கூறவும், தொடை நாடிகளை அழுத்தியவாறு இருந்தவள் தனது ஒவ் வொரு விரிசலாக மெதுவாக எடுக்க, சீறிப்பாயும் குருதியை அடையாள மாகக் கொண்டு உபகரணங்களால், அவற்றைப் பிடிக்கின்றாள். குருதிப் பெருக்கு கட்டுப்படுத்தப்படுகின்றது. இவ்வளவும் சில நிமிடங்களில் நடந்து முடிகின்றது.

'அக்கா சான்ட் சென்றிபி(f) யூக்சில 2 ரியூப் உடைந்து விட்டது' அவள் கூறவும், நேற்றைய எறிகணை வீச்சில் சிதைந்த மருத்துவப் பொருட்கள் இவளின் ஞாபகத்திற்கு வருகின்றது. 'பரவாயில்லை மிச்ச ரண்டிலையும் போட்டுச் சுத்து' என இவள் கூற இவ்வாறு செய்யப்பட்டு நோயாளியின் குருதித் திரவ விழையமானது பிரித்தெடுக்கப்பட்டுது. அது குளிர்பதனப் பெட்டியில் பாதுகாக்கப்பட்டிருக்கும் குருதியுடன் ஒருங்கொட்டல் நடை பெறவில்லையென்பதை ரோச் வெளிச்சத்தின் உதவியுடன் ஒளி நுணுக்குக் காட்டியின் மூலம் உறுதி செய்யப்படுகின்றது. 'BP' எ வாறு? என இவள் கேட்க 'எயிற்றி பை சிக்ஸ்ரி' என மற்றப் போராளி கூறவும் 'கும் கும் கும் என எதிரி செல்குத்தும் சத்தம் கேட்கவும் காயமடைந்த போராளியைத் தூக்கிய வண்ணம் கடற்கரைப் பொந்துகளினுள் புகும் நண்டுகள் போல் விறு விறு என நிலவறையினுள் அவர்கள் புகுந்து கொள்ளவும், படீர், படீர் என எறிகணைகள் அருகில் விழுந்து வெடிக்கவும் சரியாக இருந்தது. மேற்படி நேரக் கணிப்புடன் கூடிய வேகமான செயற்பாடானது அவர்களின் போர்க்கள வாழ்வனுபவத்தை வெளிப்படுத்துகின்றது.

நிலவறையினுள் சிகிச்சையானது தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது. தொடர்ந்து குருதிதிரவ ஊடகங்கள் ஏற்றப்படுகின்றன. கால்களில் சிதைந்த என்பு, தசை நார்கள் வெட்டியகற்றப்பட்டு சிறு சிறு குருதிக் கலன்களும் கட்டப்பட்டு உரியமுறையில் கட்டுப் போடப்படுகின்றது. 'சதீற்றர் போட்டு யூரின் அவுட்புட்ஐ நோட் பண்ணுங்கள்' என அருகில் நின்ற போராளியிடம் கூறியபடியே ரோச்லைற் வெளிச்சத்தில் காயமடைந்தவனின் முகத்தைப் பார்க்கின்றாள். அவனது முகத்தைப் பார்த்துத் தனது புருவங்களை உயர்த்தியவள் 'நேற்று இவன் தன்ர சொல்லைக் கேட்டிருந்தால் இந்த நிலை வந்திருக்காது' எனத் தன்னுள் மெல்ல முணுமுணுக்கின்றாள். எனினும் அதன் நியாயமின்மையை உணர்ந்தவள் தனது எண்ண அலைகளை அலட்சியம் செய்தவாறு பையினுள் சேகரிக்கப்பட்ட சிறுநீரின் அளவைக் கவனிக்கின்றாள். 50ml தன்னால் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையின் விபரம், கொடுக்கப்பட்ட குருதி, திரவ ஊடகங்கள், மயக்கமருந்து போன்றவற்றின் அளவுகள், குருதியமுக்கம், நாடித்துடிப்புவீதம், நேரம் போன்ற இன்னோரன்ன குறிப்புகளைச் சிறு அட்டையொன்றில் எழுதி அவன் கையில் கட்டிவிடுகின்றாள். மேற்படி குறிப்புகள் அடுத்த நிலையில் நிற்கும் மருத்துவருக்கு உதவியாக இருக்கும் என்பதால்.

கட்டைக்காட்டில் அமைந்திருக்கும் அந்த மருத்துவத்தளமானது காலையில் இருந்து சுறுசுறுப்பாக இயங்கிய வண்ணம் இருந்து. இராணுவம் கைவிட்டு வெளியேறிய மினி முகாம் ஒன்றிலேயே அது அமைக்கப்பட்டிருந்தது. நிலவறைகள் அமைக்கப்பட்டிருந்த பகுதியில் இருந்த கொட்டகை ஒன்றின் நடுவில் போராளியொருவன் கிடத்தப்பட்டுள்ளான். அவனைச் சுற்றிவர சத்திரசிகிச்சைக்கான மருத்துவர், உதவியாளர் மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவர், உதவியாளர், சத்திர சிகிச்சைக்கான தாதியர் போன்றோர் வரிப்புலிச் சீருடையிலேயே காணப்படுகின்றனர். சாதாரண மின் குமிழ்களின் ஒளிர்வானது, காணாது என்பதனால் 'மக்ரோச்' இன் மூலம் சத்திரசிகிச்சைக்கான பகுதி ஒளிர்வூட்டப்படுகின்றது. ரவை ஊடுருவிய காயத்தைக் கொண்டிருக்கும் அப்பகுதியானது வெட்டி விரிக்கப்பட்டு தசைநார்கள் விலக்கப்பட்டு தொடர் குருதிப் பெருக்கிற்குக் காரணமாக இருக்கும் தொடை நாடியானது கையுறை இடப்பட்டிருக்கும் அவன் விரல்களால் பிடிக்கப்படுகின்றது. எனினும் குருதிப் பெருக்கானது முழுமையாக நிற்கவில்லை. தொடைநாளமும் முற்றாகச் சிதைந்திருந்த காரணத்தினால் ஊற்று நீர் வெளிவருவது போல் அப்பகுதி உறிஞ்சி வெளியேற்றும் 'சக்கா' இன்மையால் குருதியானது 'கோஸ்' இனால் ஒற்றி அகற்றப்படுகின்றது. குருதிக் குழாய்களைச் சேதமாக்காமல் குருதிப் பெருக்கை நிறுத்தும் தன்மையுள்ள 'வஸ்குலர் கிளாம்ப்' என்ற உபகரணத்தால் குருதி ஓட்டமானது தடுக்கப்படுகின்றது. தொடை நாடியில் சிறிய சேதமும், தொடை நாளத்தில் பாரிய சேதமும் உள்ளது அவதானிக்கப்படுகின்றது. அப்பொழுது 'வஸ்குலர்' சேஜிரி' செய்யப்போகிறீங்களா?' என்று மயக்க மருந்து கொடுப்பவர் கேட்கிறார். அதற்கு இவன் (f) பெமறல் ஆட்றியில் சின்ன ரியர் தான். திருத்திவிடுவம் எத்தனை பைந் பிளட் போட்டுட்டீங்கள்?' எனக்கேட்கின்றான். அதற்கு அவள் 5 பைந்த் போட்டாச்சு,BP இன்னும் பிக்கப் பண்ணவில்லை எனக் கூறுகின்றாள். இதுவரை வேகமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தவனில் சிறிய தயக்கம் ஏற்படுகின்றது. 'வஸ்குனர் சேஜரி தொடர்ந்து செய்வதானால் இன்னும் 4 அல்லது 5 பைந்த் குருதி போடவேண்டிவரும். விகிதாசார அடிப்படையில் 8 பைந்த்திற்கு மேல் குருதி கொடுத்து செய்யப்படும் சத்திரசிகிச்சைகள் வெற்றியளிப்பது குறைவாகவே உள்ளது. அந்த அடிப்படையில் பார்த்தால் இவனது முந்தைய அனுபவப்படி 13 பைந்த் குருதி ஏற்றி செய்யப்பட்டிருந்த சத்திரசிகிச்சையும் வெற்றியளித்திருந்தது. மேற்படி புத்தக அறிவிற்கும், அனுபவத்திற்கும் இடையில் ஏற்பட்ட மனப் போராட்டத்தின் விளைவாகச் சிகிச்சையினைத் தொடர்வது என முடிவிற்கு வருகின்றான்.

போர் முழக்கத்தை வெளிப்படுத்தும், வந்து விழுந்து வெடிக்கும் எதிரியின் எறிகணைகளும், சிறு நூறு மீற்றர் தூரத்தில் போராளிகளால் ஏவப்படும் எறிகணைகள் புறப்படும் சத்தமும், வானில் சுற்றிக் கொண்டிருக்கும் ஆளில்லா வேவுவிமானமும், சற்றுத் தொலைவில் கேட்கும் கனரகத் துப்பாக்கிகளின் ஓசையும் போர் நிலைப் பிரகடனத்தைத் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றன 50m தூரமளவில் விழுந்து வெடித்த ஆட்லறி எறிகணையொன்றின் சிதறல்கள்

இவர்களின் கொட்டகையைச் சுற்றி அடுக்கப்பட்டிருந்த பனைமரத் துண்டங்களில் சடசடவெனப் பதம் பார்க்கின்றன. அவ்வேளை தூரத்தில் இருந்து இவர்களின் பகுதியை நோக்கி 'லான்ட்ரோவர்' வாகனம் ஒன்று வேகமாக வருகின்றது. 'வண்டு சுத்துறதையும் கவனிக்காமல் இவங்கள் வாறாங்கள்' எனக் கோபமுடன் கத்தியபடி அவ்வாகனத்தின் திசையைத் திருப்பிவிடும் முகமாக அவ் வாகனத்தை நோக்கி ஓடுகின்றான் ஒரு போராளி. இவ்வாறான சந்தர்ப்பம் ஒன்றின்போது எமது மருத்துவத்தளம் ஒன்று வான் தாக்குதலுக்குள்ளானதால் இரண்டு இராணுவ மருத்துவர் உட்பட சில பேரை நாம் இழந்திருந்தோம். அந்நிகழ்வு ஞாபகத்திற்குவர அனைவர் மனதிலும் பயம் ஒன்று எட்டிப்பார்க்கவே செய்கின்றது எனினும் அரைகுறையாகச் சத்திரசிகிச்சையை நிறுத்திவிட்டுப் போக முடியாததாலும் அவர்கள் அதனை வெளிக்காட்டாமல் தமது பணியைத் தொடர்ந்தனர்.

சத்திரசிகிச்சை முடிவடைகின்றது. தொடை நாடியானது திருத்தப்பட்டு, நாளமானது கட்டப்பட்டு விட்டது. 9 பைந்த் குருதி ஏற்றியாகிவிட்டது. எனினும் குருதி அமுக்கமானது உரிய அளவிற்கு உயரவில்லை. தான் எடுத்த முடிவு சரியா, பிழையா என்னும் மனப் போராட்டத்தை அவனது முகம் பிரதிபலிக்கின்றது. 'இன்னுமொருபைந்த் (f) பிறெஷ் பிளட் போடுவோமா?' என மற்ற இராணுவ மருத்துவரிடம் ஆலோசனை கேட்கின்றான். 'போடலாம்தான் ஆனால் எங்க போறது?' அவளின் கேள்வியின் நியாயத்தை உணர்கின்றான். ஏனெனில் இவர்களிடம் குளிர்சாதனப் பெட்டியில் இருப்பது 5 நாட்களுக்கு முன் எடுக்கப்பட்ட குருதியே. உடனடியாக இரத்தம் மக்களிடமிருந்து பெறுவதானால் நீரேரி கடந்து கண்டாவளை வந்தால்தான் சாத்தியம். மேற்படி கருத்துக்களை எண்ணியவன் அப்பகுதியில் நிற்கும் போராளிகளை நோட்டம் விடுகின்றான். அவர்களில் எல்லோரிடமும் அண்ணளவாக ஒன்றிரண்டு கிழமைகளுக்குள் இரத்தம் பெறப்பட்டு விட்டது. அப்பொழுது புதுமுகமான பெண் போராளி ஒருவரைக் காண்கின்றான். அவளை நோக்கி 'தங்கச்சி, நீங்க என்ன பிளட் குறூப்?' எனக் கேட்கின்றான். அவள் 'O பொசிடிவ்' எனப் பதிலிறுக்கும் தொனியில் இரத்த தானம் செய்வதற்கு ஆவலாயிருப்பதை வெளிப்படுத்துகின்றாள். அப்பொழுது அருகில் நிற்கும் பெண் இராணுவ மருத்துவர் 'இவ ரீம் கொண்டு சண்டைக்குப் போறார்' எனக்கூறுகிறா. அது சொல்லப்பட்ட முறையில் அங்கு காயப்படலாம் என்பதும் தொக்கி நிற்கின்றது. மேற்படி விடயத்தைக் கவனத்தில் எடுத்தவன் 'பிரச்சினையில்லை, பிளட்டைத் தந்திட்டு குறைந்தது ஒரு கிழமை சண்டைக்குப் போகாமல் நில்லுங்கள்' எனச் சற்றுச் சிரிப்புடனே கூறுகின்றான். மேற்படி போராளியின் குருதியும் எடுத்து உரியவனுக்கு ஏற்றப்படுகின்றது.

இப்பொழுது வேவு விமானத்திற்கு இடத்தைக் காட்டிக் கொடுக்கக்கூடாது என்னும் காரணத்தால் வேறு இடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனமானது இங்கு வருகின்றது. அதில் இருந்து இரண்டு காலும் துண்டிக்கப்பட்ட அப்போராளியானவன் இறக்கப்படுகின்றான். அவன் இன்னும் மயக்க நிலையிலேயே இருக்கின்றான். அவனது குருதி அமுக்கமும் குறைவாகவே காணப்பட்டது. சிறுநீரும் 50ml க்கு மேல் வெளியேறியிருக்கவில்லை. காயமடைந்து 10 மணித்தியாலத்தின் மேல் இருக்கும். இந்நிலை தொடருமானால் சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டு இரண்டு மூன்று நாட்களில் அவன் உயிரிழக்கலாம். மேற்படி விடயங்களைக் கருத்தில் கொண்டு மேலதிக சிகிச்சையானது அளிக்கப்படுகின்றது. தங்களால் இயன்ற அளவு செய்தபொழுதும் மேற்படி இரு போராளிகளும் உயிர் தப்புவார்களா என்பது சந்தேகமாகவே உள்ளது. இருவரில் ஒருவனின் உயிராவது தப்பாதா? என்னும் ஏக்கம் அவனைப் பற்றிக் கொள்கிறது. அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் இருந்தால் இரண்டு காலும் உள்ளவன் தப்பினால் நல்லது என அவனது உள்மனம் எண்ணுகின்றது. அவனுக்கு அவனிலேயே வெறுப்பு ஏற்படுகின்றது காரணம் மனித உயிர்களிலும் லாப நட்டக் கணக்குப் பார்ப்பதை உணர்கின்றான். இரு போராளிகளையும் வன்னி மருத்துவத் தளத்திற்கு அனுப்பிவைக்கின்றான்.

தொடர்ந்து பல பத்துக் காயக்காரர்கள் தொடராக வந்ததால் ஏற்பட்ட வேலைப்பழுவினால் 3 நாட்கள் கடந்து விட்டிருந்தது. இன்று சற்று ஓய்வு கிடைத்தபோது முதலில் அனுப்பிய இரண்டு போராளிகள் பற்றிய நினைவு வருகிறது. உடனேயே அம் முகாமிலிருக்கும் வோக்கி மூலம் பின் தள மருத்துவமனைக்கு அருகிலிருக்கும் நிலையமொன்றுடன் தொடர்பு எடுக்கின்றான். மேற்படி இரு போராளிகளின் நிலைமை பற்றி அறிந்து சொல்லும்படி கேட்கின்றான். சிறிது நேரத்தில் பின் தளப் பிரதான மருத்துவர் நேரடியாக இவனுடன் கதைக்கின்றார். 'பிரச்சினையில்லை நீங்கள் 2 கேசும் நல்லாச் செய்து அனுப்பியிருந்தீங்கள் வாழ்த்துக்கள்!' என்று கூறியவர் சற்றுத் தாமதிக்கின்றார் தொடர்ந்து அவர் '2 காலும் அம்புரேசன்' செய்த பேசன்ற் ஆபத்தான கட்டத்தைத் தாண்டிற்றார். இது உண்மையில் மருத்துவ சாதனையே' என்றவர் தொடர்ந்து சொல்கின்றார். 'மற்றவருக்கு றீனல் (f) பெயிலியர் வந்துவிட்டது, நீங்கள் அங்கு இதைவிடச் சிறந்த ஒரு முடிவு எடுத்திருக்க முடியாது தானே!' எனக்கூறி முடிக்கின்றார்.

இவன் தன்னுள் எண்ணுகிறான். மேற்படி கருத்துக்கள் தான் சோராமல் இருப்பதற்குச் சொல்லப்பட்டவைகளாக இருக்கலாம் என. போர் மருத்துவத்தில் பல சந்தர்ப்பங்களில் சில நிமிடங்களில், சில செக்கன்களில் எடுக்கப்படும் முடிவுகளே உயிரைத் தக்கவைக்குமா, இல்லையா என்பதை தீர்மானிக்கின்றன. மேற்படி நிகழ்வில் ஒரு போராளி காப்பாற்றப்பட்டதையிட்டு சந்தோசப்படுவதா, அல்லது இன்னுமொருவனைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதற்காகக் கவலைப்படுவதா என இருதலைக் கொள்ளி எறும்பாகத் தன்னுள் தத்தளிக்கின்றான். இரண்டு காலும் முழங்காலுக்கு மேல் இல்லாமல் போய் அவன் என்ன செய்யப்போகிறான்?



அச்சூழ்நிலைக்குப் பொருத்தமற்றதான அக்கேள்வி அவனுள் வருகின்றது. அவனுக்கு 'உண்மை மனிதன் கதை'யை வாசிக்கச் சொல்லவேண்டும் எனத் தனக்குள் எண்ணிக் கொள்கின்றான். தனது தவறான முடிவினால் ஒருவன் உயிரிழந்து விட்டானோ என ஏற்படும் குற்ற உணர்வைத் தவிர்க்கும் முகமாக தப்பியவனை வல்லமையுடையவனாக்கும் முயற்சியை தனது மனம் ஆராய்கின்றது என எண்ணினான். அப்பொழுது விரைவாக வரும் வாகனச் சத்தமொன்று அடுத்துவரும் காயக்காரர்களை ஏற்று சிகிச்சையளிப்பதற்காக இவனை உசார்ப்படுத்துகின்றது.

# மாவீரர் நாள் நினைவு நிகழ்வுகள்





## இத்தாலி

18.11.2001அன்று இத்தாலி உத்ரெக் மாநகரில் தமிழீழத் தேசிய மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. சுமார் 1500ற்கும் அதிகமானோர் கலந்து கெண்ட இந்நிகழ்வில் எழுச்சி உரைகளும் பல கலை நிகழ்வுகள் என்பனவும் உணர்வு பூர்வமாக நடைபெற்றன.





## சவுதி அரேபியா

மத்திய கிழக்கு நாடான சவுதி அரேபியாவில் தேசிய மாவீரர் நாள் நிகழ்வுகள் நினைவு கூரப்பட்டது. நூற்றுக் கணக்கானோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

# சுதந்திரத்தைத் தேடி..



**புதியவள்**

# கப்டன் தேனுஜா (மதனி)

அன்று 14.07.1992 பௌர்ணமி முழு நிலவு, கறுக்காய்வெட்டையில் நிலை கொண்டிருந்த எமது தோழர்களின் இதயங்களிலோ வேதனைப் பெரு நெருப்புப் பற்றியிருந்தது.

'தேனுஜா வருவாள்' என்று நம்பிக்கையைச் சுமந்தபடி இன்னும் அவர்கள் விழிகளை வழியிற் பதித்தபடி காத்திருந்தனர்.

காலை 10.00 மணிபோல் இராணுவத்தின் நிலைகளை வேவுபார்க்கச் சென்றிருந்தாள் தேனுஜா. அவள் போய் ஒரு மணித்தியாலந்தான் கழிந்திருக்கும்... அண்மையில் திடீரெனக் கேட்ட குண்டு வெடிப்புச் சத்தம் எல்லோரையும் ஒரு கணம் உலுக்கிவிடுகிறது.

'தேனுஜாவுக்கு ஏதும் நடந்திருக்குமோ' எல்லோர் மனங்களிலும் ஏக்கம்.

'தேனுஜாவைத் தவிர வேறு யாரும் அத்திசையில் செல்லவில்லையே... இப்படித்தானே பலநாட்கள் நடந்தன' இது இன்னொரு பக்கமனம்.

எதிரியின் பதுங்குகுழிகளுக்குள் நின்று கொண்டே எதிரியைத் தேடுகின்ற லாவகமும், பொறி வைத்துக் காத்துக் கிடக்கின்ற எதிரியின் கண்களை ஏமாற்றி விட்டுத் தப்பி வருகின்ற திடசித்தமும் தேனுஜாவுடன் கூடப் பிறந்த திறமைகளாயிற்றே....

எப்படியும் எங்கள் தேனுஜா வருவாள். விழிகள் பாதையை இறுகக் கவ்வியிருந்தன.

இப்படித்தான் அன்றும் ஒருநாள்....

தான் அவதானித்த எதிரியின் நிலைகளைக் காட்டுவதற்காகத் தளபதிகளைக் கூட்டிச்சென்றிருந்தாள்.

பாதையில் ஓரிடத்தில் அவர்களை நிறுத்தி வைத்துவிட்டு முன்னே சென்று மீண்டும் நிலைமையைப் பார்த்துவர எண்ணினாள்.

அங்கே... எதிரி ஒருவன் தன்னை உரு மறைத்தபடி மர நிழல் ஒன்றில் நின்றிருந்தான். அவனை எமது தோழர்கள் என நினைத்தவள் 'யார் அண்ணாவா' என வினாவுகிறாள்.

ஒரு கணம்தான்.... நிலைமையைப் புரிந்து கொண்டாள். எதிரியின் துப்பாக்கி இயங்குகின்றது. வேவு பார்ப்பதற்காகத் துப்பாக்கியை வைத்தவிட்டுக் கைக்குண்டுடன் சென்ற தேனுஜா சிறிதும் பதறவில்லை. சிரித்தபடியே எம்மிடம் ஓடி வந்தாள். 'ஆமியை நான் எங்கட அண்ணாக்கள் எண்டெல்ல நினைச்சுப் போட்டேன்' என்று கூறிச் சிரித்த தேனுஜா....

மீண்டும் வருவாள்....

'எங்கள் தேனுஜாவுக்கு எதுவும் நடக்காது' எல்லோர் இதயங்களிலும் இதே ஏக்கம். எல்லோர் உதடுகளிலும் இதே உச்சரிப்பு.

நேரம் நடுநிசியையும் தாண்டிக் கொண்டிருக்கிறது. எங்கள் தேனுஜாவை இன்னும் காணோமே.

அப்ப ஏதாவது நடந்திருக்குமோ..... இதயம் நம்ப மறுத்து, மீண்டும்.....

சருகுகள் மிதிபடும் ஓசை. எல்லோர் இதயங்களிலும் நம்பிக்கையின் துளிர்ப்பு. தேனுஜா... தேனுஜா... வோக்கியில் எங்கள் நம்பிக்கைகளையெல்லாம் ஒன்றாக்கிக் கூப்பிடுகிறோம். 'தேனுஜா...! நாங்கள் கிட்டத்தான் நிற்கிறம் வாங்கோ' சருகுகளின் ஓசையில் ஒரு கணம் துளிர்த்த நம்பிக்கை மீண்டும் தவிடுபொடியாய்....

எங்கள் தேனுஜாவை நாங்கள் இழந்து விட்டோம். கசப்பான உண்மையை ஏற்றுக் கொள்ள முடியாமல் எல்லோருடைய முகங்களும் ஒரு கணம் மண் நோக்கிக் கவிழ்ந்தன.

ஆம்! இவளின் இழப்பை யாரும் இன்னும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை.

எப்பொழுதும் அன்பு குழைந்த முகத்துடன் எல்லோருடனும் எந்தவிதப் பேதமும் இன்றிப் பழகுகின்ற மதனி சாகவில்லை என்று அவளை நேசித்த அவளின் கிராமத்து மக்கள் இன்னும் உறுதியாகக் கூறிக்கொள்கிறார்கள்.

இதுதான் எங்களுடைய விடுதலைப் போராட்டம். ஒவ்வொரு போராளியும் வாழ்விலும் சாவிலும் இந்தத் தேசத்தின் வாழ்வுடன் இரண்டறக் கலந்து போயிருக்கிறார்கள்.

அழ மறந்துபோய் மதனியின் போராட்ட வாழ்வை நினைவு கூர்கின்றனர் அவளின் பெற்றோர், சகோதரிகள்....

இவளுக்கு யாரையும் கோபிக்கத் தெரியாது, அதேநேரம் பிரச்சினைகளைக் கண்டு ஒதுங்கிப்போகின்ற சுபாவமும் இவளுக்கில்லை.

இந்திய இராணுவம் எம் மண்ணில் நிலை கொண்டிருந்த காலத்திலே துணிந்து மாணவியாக இருந்து கொண்டே தன்னுடைய பங்களிப்பைச் செய்தவள். அக் காலத்தில் இந்திய இராணுவ வெறித்தனத்துக்கெதிராக நடைபெற்ற ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள், மறியற்போராட்டங்கள் எதிலும் தேனுஜாவைக் காணலாம். வடமராட்சி மாணவர் ஒன்றியத்துடன் இணைந்து செயற்பட்ட இவள், மாணவர்கள் இந்திய இராணுவத்தால் வெறித்தனமாகத் தாக்கப்பட்ட நேரங்களில் எல்லாம் எதிரியின் பாசறை தேடிச் சென்று நியாயம் கேட்டவள். எந்த நேரத்திலும் ஆபத்து ஏற்பட்டு விடுமோ என இவள் அஞ்சியது கிடையாது.

வீட்டில் இருக்கும் பொழுதே தேனுஜா தெளிவான முற்போக்கான கருத்துக்களைக் கொண்டிருந்தாள். பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்ற ஆழமான நம்பிக்கை கொண்டவள். அவள் தனது பாடசாலைப் பிராயத்திலே தனது வாழ்க்கைத் துணைவனாக நேசித்தவன், இவளின் இத்தகைய புரட்சி மனப்பாங்கை ஏற்றுக்கொள்ள முடியாது தோற்றுப் போனான். தேனுஜா ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வாழ்க்கையில் வரும் சவால்களை எதிர்கொண்டு புதிதாய்ப் பிறந்தாள்.

உண்மையில் 'அன்பு' என்பதன் உன்னத அகராதியாக இவள் திகழ்ந்தாள். துள்ளித் திரிகின்ற நடையும், எதையும் கலகலப்பாக மட்டுமே பேசத் தெரிந்த இவளின் தன்மையும் அறுக்க முடியாத பெரும் பாசப்பிணைப்பையல்லவா ஏற்படுத்தி நிற்கின்றது.

இவள் காயப்பட்டிருந்த நேரம் 'ஏன் மதனி இனியாவது வீட்டில் நிற்கலாம்தானே' என்று இவளுடன் பழகியவர்கள் கேட்ட நேரம் மட்டும்தான் இவளது முகத்திலே கோபத்தைக் கண்டதாகக் கூறுகின்றார்கள். உண்மைதான், இதை இவளுடன் கூட இருந்த ஒவ்வொரு போராளியும் மறக்க மாட்டார்கள்.

**தேனுஜா!**

இவள் மகளிர் படையணியின் வரலாற்றில் ஓர் திருப்புமுனை. 1989ம் ஆண்டு 6வது பயிற்சி முகாமிலே தனது பயிற்சியை முடித்துக்கொண்ட இவள் தனது ஒவ்வொரு செயற்பாட்டிலும் புதிய முத்திரை பொறித்து நிற்பாள். அருள் 89 எனப்படும் துப்பாக்கி எறிகணையைச் செலுத்துவதில் இவள் ஒருபோதும் தோல்வியைக் கண்டது கிடையாது.

தேனுஜா தனது பயிற்சியை முடித்துக் கொண்ட காலத்தில் இருந்து அவள் இல்லாமல் எந்தச் சண்டையும் நடந்தது இல்லை. அவளைச் சண்டைக்கு செல்லவிடாது யாராலும் தடுக்க முடியாதிருந்தது.

தேனுஜாவின் கள அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதே ஒரு தனி வரலாறு. எந்தக் களத்திலும் இவள் தனியான முத்திரையைப் பதிக்காது வரவில்லை.

பலாலி இராணுவ முகாமைச் சுற்றி மகளிர் படை எல்லையிட்டு நின்றபோது தேனுஜாவின் கால்கள் எப்போதும் எதிரியின் முகாமைச் சுற்றிச் சுற்றி நடந்தன. இராணுவ நடமாட்டம் அனைத்தையும் ஒன்றும் விடாது அவள் விழிகள் அவதானித்தன. அப்பொழுது இராணுவப் பகுதியில் இருந்து கிரனைட், டொங்கான் ஷெல் போன்றவற்றை எடுத்து வந்தாள். இதைத் தொடர்ந்து கட்டுவனில் ஏற்பட்ட மோதலில் தேனுஜா காயப்பட்டாள். ஆனால் எந்தக் காயமும் இந்த வேங்கையினது வேகத்தை முடக்கிவிடவில்லை. வீறுகொண்டெழவே வைத்தன.

சிலாபத்துறை முகாம் தாக்குதலில் இவளது போர்த்திறனைப் பற்றி எமது தோழிகள் பெருமையுடன் நினைவுகூர்வார்கள். மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரை அங்குள்ள போராளிகளுக்கு மகளிர்படை என்றவுடன் நினைவுக்கு வருவது தேனுஜாதான். அந்தளவு தூரத்திற்குச் சிலாபத்துறை முகாம் தாக்குதலில் அவள் வீரத்துடன் போரிட்டாள்.

சிலாபத்துறை முகாம் தாக்குதலின் முதற் கட்டமாக, சிலாபத்துறை மினிமுகாம் பயங்கரமான மோதலின் பின் எம்மால் வெற்றி கொள்ளப்பட்டது. அடுத்த கட்டமாகப் பிரதான முகாமைக் கைப்பற்றும் முயற்சி நடைபெற்றது. தேனுஜாவின் குழுவினர் வானிலிருந்து வரும் குண்டு மழையையோ, ஷெல் வீச்சையோ பொருட்படுத்தாது பாய்ந்தோடி, முகாமின் ஒரு பகுதிக்குள் நுழைந்துவிட்டனர். எவரின் உதவியையுமே பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் நீண்ட நேரமாகத் தேனுஜாவும் அவள் குழுவினரும் அந்த இடத்தில் நின்றவாறு, இராணுவத்தினருக்குத் தரை மார்க்கமாகவோ, கடல் மார்க்கமாகவோ உதவி கிடைக்காதவாறு தடைசெய்து கொண்டிருந்தனர். தேனுஜா தனது அருள் 89 எறிகணைகளை ஒவ்வொன்றாக முகாமினுள் செலுத்தி எதிரியின் வேகத்தை அடக்கிக் கொண்டிருந்தாள்.

இந்நேரம் இராணுவத்தினருக்கு உதவி வழங்கும் நோக்கில் வானிலிருந்து விமானம் மூலம் ரவைப் பொதிகள் போடப்பட்டுக் கொண்டிருந்தன. இராணுவ நிலைக்கு அண்மையில் விழுந்த ரவைப்பொதிகளில் இரண்டை தனியனாக ஊர்ந்து சென்று எடுத்து வந்தாள் தேனுஜா. குழந்தையாய் குதுாகலித்து நிற்கும் தேனுஜாவைக் களத்திலே கண்டால், தேனுஜாதான் என்று யாரும் நம்பமாட்டார்கள். அந்தளவு துாரத்திற்கு சினங்கொண்ட வேங்கையாய் கிளர்ந்தெழுந்து நிற்பாள். சிலாபத்துறை முகாமை தகர்க்காது பின் வாங்க மாட்டேன் என்ற அவளது வேகம் வீரச்சாவைத் தழுவும் வரை சிறிதும் தணியவில்லை. எப்படியேனும் எதிரியை இம் மண்ணிலிருந்து விரட்டி விடவேண்டும், எம் மண்ணில் புலிக் கொடியை உயரப் பறக்கவிட வேண்டும் என்ற மாறாத இலட்சியக் கனவுடன்தான் தனது ஒவ்வொரு நடவடிக்கைகளையும் மேற்கொண்டாள்.

> **உண்மையில் 'அன்பு' என்பதன் உன்னத அகராதியாக இவள் திகழ்ந்தாள். துள்ளித் திரிகின்ற நடையும், எதையும் கலகலப்பாக மட்டுமே பேசத் தெரிந்த இவளின் தன்மையும் அறுக்க முடியாத பெரும் பாசப்பிணைப்பையல்லவா ஏற்படுத்தி நிற்கின்றது**

சிலாபத்துறைத் தாக்குதல் தேனுஜாவை ஒரு சிறந்த போராளியாக, சிறந்த வீராங்கனையாக இந்த உலகுக்கு வெளிப்படுத்தியது. இந்தத் தாக்குதலில் இவள் கையிலே காயமடைந்தாள்.

ஆனையிறவுச் சமரின்போதும் இவள் தன்னுடைய முழுத் திறமைகளையும் வெளிக்காட்டியிருந்தாள். எதிரியுடன் நேருக்கு நேர் நின்று மோதுவதில் இருந்து, களத்தில் காயப்பட்ட வீரர்களை விரைவாக இடம் மாற்றுவது. களத்தில் நின்று போராடிக் கொண்டிருக்கும் போராளிகளுக்குத் தேவையான வெடிபொருட்கள், உணவு, நீர் போன்றவற்றை வழங்குவது என்று எல்லா முனைகளிலும் பாய்ந்தோடி நின்றாள்.

தொடர்ந்து மணலாற்றில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போதும் தேனுஜாவின் பங்களிப்பு மறக்கமுடியாதது. அடர்ந்த காட்டுக்குள் தளம்பாத உறுதியுடனும் வீரத்துடனும் நின்று போராடினாள். இந்தச் சண்டையின்போது அவளது வயிற்றில் பெரிய காயம் ஏற்பட்டது.

இவளது ஆற்றலும், அருமையும், வீரமும், துணிவும் மகளிர் படையணிக்கென்றொரு தனித்த விசேட வேவுப் பிரிவை உருவாக்குகின்ற அளவுக்கு வளர்த்துச் சென்றன. விசேட வேவுப் பிரிவின் பொறுப்பை ஏற்ற தேனுஜா இரவு, பகல் பாராது உழைத்தாள். எப்படியேனும் மகளிர் படையணி தானே முழுமையான போர்த்திட்டங்களையும் வகுத்து இராணுவ முகாம் ஒன்றைத் தாக்கி அழிக்க வேண்டும் என்ற இலட்சியக் கனவை இதயத்துள் தேக்கிவைத்தாள். அதனைச் செயலுருவில் கொண்டுவர வேண்டுமெனத்துடித்தாள்.

இயக்கச்சியைக் கைப்பற்றும் நோக்குடன் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பிரேஷன் பலவேகயா-2 நடவடிக்கையின்போது தேனுஜாவின் வேகத்தைக் கண்ட தளபதிகள் அனைவருமே இவளின் திறமையை வியந்து நின்றனர்.

'நாங்கள் எந்த இடத்திற்குப் போனாலும் அங்கே தேனுஜா நிக்கிறா. எப்படி இவவால இப்படி நடக்க முடிகிறது இதுவரை இங்கேயே நிண்ட எங்களுக்குக் கூட தெரியாத இடமெல்லாம் இந்தப் பிள்ளைக்கு தெரிந்திருக்குது' என்று கூறி ஆச்சரியப்பட்டனர்.

ஆம், இயற்கையின் ஒவ்வொரு அசைவையும் கூர்ந்து அவதானித்துச் செயற்படுவதில் வல்லவளாகிய இவள் இந்தச் சண்டையின்போது எல்லோருக்கும் வழிகாட்டியாக நின்றாள்.

சிட்டுப்போல பறந்து திரிந்து எதிரியின் அசைவை அவதானித்து நின்றாள். நாம் எல்லோரும் 'எதிரி எங்கே.... எங்கே....' என்று அவன் வரவைத் தேடி நிற்க, இவளோ எதிரியின் பக்கத்தில் நின்று கொண்டே தன்னுடைய நடவடிக்கைகளை மேற்கொண்டாள். விடுதலைக்காக அவள் எதையும் செய்யத்தயாராக இருந்தாள்.

ஒருமுறை வேவு பார்க்கப் போனவள், திடீரென்று வோக்கியில் அறிவிக்கிறாள். 'ஆர்.பி.ஜி யோடை உடனை வாங்கோ' என்று. மறுகணம் 'வேண்டாம், நானே நேரில் வருகிறேன்' என்று அறிவித்தாள், எங்களுக்கு விளங்கவில்லை.

நேரில் வந்தபோது தேனுஜா சொன்னாள், 'அக்கா, எங்கடை இடத்திலை எதிரி வந்து குசாலாகத் திரிகிறதைப் பார்த்தவுடன் எனக்கு கண்மண் தெரியாமல் கோபம் வந்திட்டுது. கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுவிட்டன். பிறகுதான் நான் போன வேலையை யோசிச்சன். எனது தவறு விளங்கிச்சு. அதுதான் அப்படி அறிவிச்சனான்' என்றாள்.

எதிரியைக் கண்ணால் கண்டும் அவன் குசாலாகத் திரிவதைக் கண்டும் இவள் ஏன் தன்னை அடக்கிக் கொண்டாள். எங்கள் மண்ணில் எதிரியின் பாதப் பதிவுகூட இருக்கக் கூடாது என்பதற்காக நிதானத்துடன் திட்டங்களை வரைந்து கொண்டிருந்தவள் இந்த வேங்கை. இதனால்தான் அவள் தனது ஆத்திரத்தை அடக்கிக் கொண்டாள்.

இன்னொரு நாள் வேவு பார்க்கப் போனவள் வந்து சொன்னாள், 'அக்கா அந்தப் பொயின்றிலை இரண்டு டொங்கான் இருக்கு. எப்படியும் நான்தான் அதை அடிச்சு எடுப்பன். இரண்டு டொங்கானையும் எடுத்து அண்ணாட்டைக் கொடுத்து எங்களுக்கு எம் 203 ஒண்டு வாங்குவன்' என்றாள்.

எத்தனையோ ஆயிரம் கற்பனைகளைத் தனது இதயத்தில் தேக்கி எங்கள் தேனுஜா செயற்பட்டாள். சண்டை தொடங்கிய நாளில் இருந்து தன்னைப் பற்றி அவள் பொருட்படுத்தியது கிடையாது. பதினைந்து நாளாக குளிக்கக்கூட இல்லை. சாப்பாட்டில் கவனம் செலுத்தவில்லை. அவளது முழுக் கவனமும் எதிரியின் நிலைகளைத் தாக்கி அழிப்பதிலேயே செலுத்தப்பட்டது. 'எப்படியும் இவங்களை அடிச்சுத் துரத்திப் போட்டுத்தான் நான் குளிப்பன்' என்று கூறிக்கொண்டே வேகம் கொண்டு எழுந்தாள்.

தமிழீழத் தாகத்தை மட்டுமே தன் நெஞ்சில் தேக்கி வளர்த்த எங்கள் தேனுஜா தன் இலக்கை நோக்கிய பயணத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டாள். எல்லோர் இதயங்களிலும் இலட்சியக் கனவை வளர்த்துவிட்டு இவள் எமக்கு வழிகாட்டிச் சென்றுவிட்டாள்.

ஈழக்கனவினைச் சுமந்தவள் நினைவுகள் இன்று எங்கள் இதயங்களை ஆக்கிரமித்துள்ளது. அவள் பாதச்சுவடுகளில் எங்கள் பாதச் சுவடுகளை இன்னும் ஆழமாகப் பதிக்கிறோம்.

விடியலைக் காணும் வரை இந்த வேங்கைகளின் பயணம் ஓயாது.

# யுத்த நிறுத்தம்

# மீண்டும் துளிர்க்கும் சமாதானத்திற்கான நம்பிக்கைகள்



நீண்டகால இடைவெளிக்குப் பிறகு மீண்டும் இவ்வாண்டின் முடிவில் சமாதானத்திற்கான நம்பிக்கை தமிழ், சிங்கள மக்களிடையே ஆங்காங்கே துளிர்விட்டெரிகின்றன.

புதியதேர்தல், தமிழ்க் கட்சிகளின் கூட்டிணைவு புதிய சிங்களத் தலைமை என்பன பரஸ்பரம் இரு சாராரிடையேயும் சமாதானத்துக்கான எதிர்பார்ப்பினை தூண்டிவிட்டிருப்பதுடன், சமாதான நல்லெண்ண சமிக்ஞையாக தமிழீழ விடுதலைப் புலிகள் தாமாகமுன்வந்து ஒரு மாதகால யுத்தநிறுத்த அறிவிப்பை வெளியிட்டிருப்பதும் அதனை ஏற்று சிறீலங்கா அரசும் பதிலுக்கு ஒரு மாதகால மோதல் தவிர்ப்பு அறிவித்தலை வெ்ளியிட்டிருப்பதும், சமாதானம் மீதான நம்பிக்கையை தமிழ், சிங்கள மக்களிடையே மேலும் வலுப்பெறச் செய்திருக்கின்றன.

அண்மையில் நடந்து முடிந்த தேர்தல் தமிழ், சிங்கள மக்களிடையே நாட்டில் அமைதியும், சமாதானமும் ஏற்படவேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதாகவே அமைகின்றது. ஏனெனில் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் தனது மாவீரர்நாள் உரையின்போது சமாதானத்திற்கும், யுத்தத்திற்கும் இடையில் நடைபெறும் போட்டியாக உள்ள இத் தேர்தலில் யுத்தம் வேண்டுமா? சமாதானம் வேண்டுமா? என்பதை மக்கள்தான் தீர்மானிக்கவேண்டும் என்று கூறியிருந்தார். இதனடிப் படையில் பார்க்கின்றபோது, 'யுத்தம் மூலமான தீர்வு' என்னும் கோசத்தை முன்வைத்து தனது தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொண்ட சந்திரிகாவையும், அவர் சார்ந்த இனவாதக் கட்சிகளையும் தோற்கடித்து, விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை மூலமே தீர்வு என்னும் கொள்கையை முன்வைத்து தேர்தல் களத்தில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்காவையும் அவர் சார்ந்த ஆதரவாளர்களையும் ஆட்சித் தலைமையாக சிங்கள மக்கள் தேர்ந்தெடுத்து தமது சமாதானம் மீதான விருப்பை வெளிக்காட்டியுள்ளனர். இதேபோன்றே தமிழ் மக்களும் 'விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி அவர்களுடன் பேச்சுவார்த்தை மூலமான தீர்வை எட்ட வழிவகை செய்தல், இதற்காகப் புதிய அரசை நிர்ப்பந்தித்தல்' என்னும் கோரிக்கைகளின் அடிப்படையில் ஒன்றாக இணைந்து போட்டியிட்ட தமிழ்க் கட்சிகளின் கூட்டணியை வெற்றிபெறச் செய்து தமது சமாதான ஆர்வத்தை வெளிப்படுத்தினர். ஒட்டுமொத்தத்தில் இலங்கைத்தீவில் அமைதியும் சமாதானமும் நிலவவேண்டும், பேச்சுவார்த்தை மூலமான தீர்வு எட்டப்பட்டு போர் ஓயவேண்டும் என்பதே அனைத்து மக்களதும் அவாவாக இருக்கின்றது. இதற்குப் பச்சைக் கொடியாக அமைகிறது அண்மைய ஒரு மாதகால யுத்தநிறுத்தமும், புதிய பிரதமரது சமாதானம் நோக்கிய நகர்வுகளும்.

டிசம்பர் 24 நள்ளிரவு முதல் ஜனவரி 24 நள்ளிரவு வரை என அறிவிக்கப்பட்டுள்ள யுத்தநிறுத்த அறிவிப்பானது மக்கள் மனங்களில் மகிழ்ச்சியான செய்தியாக இருக்கின்றபோதும், சிறீலங்காப் படைத்தரப்பினது நடவடிக்கைகளும், படையதிகாரிகளது கருத்துக்களும் இந்த யுத்த நிறுத்தம் உரிய முறையில் பேணப்படுமா என்னும் சந்தேகங்களை கிளப்பிவிட்டிருக்கின்றன. மோதல் தவிர்ப்பு ஆரம்பிப்பதற்கு முன்னதாக நடைபெற்ற சில சம்பவங்கள் இந்த சந்தேகங்களுக்கு வலுச் சேர்ப்பதாக அமைகின்றன.

மோதல் தவிர்ப்பு அமுலுக்கு வரும் 24ம் திகதி நள்ளிரவுக்கு முதல் நாள், அதாவது 23ம் திகதி காலை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான நெடுங்கேணிப்பகுதிக்குள் ஊடுருவிய சிறீலங்காப் படையினர் அங்கு ஓர் கிளைமோர்த்தாக்குதலை நடத்தியிருக்கின்றனர். இதேபோன்று மறுநாள் மன்னார்ப் பகுதியில் பொலிசார் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றார். இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்கு தலையடுத்து, அப்பகுதிக்கு விரைந்த படைத்தரப்பினர் எதிர்ப்பட்ட மக்களை மிகக் கடுமையாகத் தாக்கியதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர். தொடர்ந்து பள்ளிமுனைப் பகுதியைச் சுற்றிவளைத்து பொதுமக்கள் அனைவரையும் ஒரு பொதுவான இடத்திற்கு அழைத்துச்சென்று சோதனை செய்தபின்னர் 46 பேரைக் கைதுசெய்து மன்னார் கிளர்ச்சித் தடுப்பு பொலிசாரிடம் கையளிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இது இவ்விதம் இருக்க சிறீலங்காப் பாதுகாப்புப் படையின் புதிய பாதுகாப்பு அமைச்சரான திலக் மாரப்பன, ஈ.பி.டி.பி உட்பட ஏனைய தமிழ்க் குழுக்களது ஆயுதங்கள் களையப்படமாட்டாது என்றும் அவர்கள் ஆயுதங்களை கொழும்புக்கு எடுத்துவரமுடியாதே தவிர மற்றும்படி சிறீலங்காப் படைகளுடன் சேர்ந்து இயங்க முடியும் என்றும் தெரிவித்திருக்கின்றார். தவிர சிறீலங்கா படைத்தரப்பின் இராணுவ பேச்சாளர் சனத் கருணாரத்ன தமது படைத்தரப்பின் வழமையான நடவடிக்கைகளான தேடுதல், சுற்றிவளைப்பு, சோதனைகள் என்பன தொடர்ந்தும் எதுவித மாற்றமும் இன்றி நடைபெறும் எனவும், கடற்பிராந்தியத்திலும் தமது கண்காணிப்புக்களும் தாக்குதல்களும் நடைபெறும் எனவும். இவை தவிர படையினர் தமது முன்னரங்க காவல் நிலைகளில் வழமையான நடவடிக்கையில் ஈடுபடுவர் எனவும் தெரிவித்திருக்கின்றார்.

இவர்களது கருத்துக்களை மெய்ப்படுத்துமாற்போல் ஆங்காங்கே இது தொடர்பான சம்பவங்களும் நடைபெற்று வருகின்றன.

போர்நிறுத்தம் அமுலுக்கு வந்தபின்னர் மறுநாள் அதிகாலை திருமலையின் புறநகர்ப்பகுதியான பள்ளத் தோட்டம் என்னும் கிராமம் சுற்றிவளைக்கப்பட்டு கிராமத்தின் கரையோரப் பகுதியில் ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாகக்கூறி படைத்தரப்பினர் அகழ்வாராய்வுக்குப் பயன்படுத்தப்படும் கனரக இயந்திரங்கள் கொண்டு கரையோரப் பகுதியை அகழ்ந்து வருகின்றனர். இவை தவிர யாழ். குடாப்பகுதி சோதனைச் சாவடிகளிலும் மற்றும், வவுனியா, மன்னார், திருகோணமலைப் பகுதிகளிலும் இராணுவ சோதனைச் சாவடிகளில் கடுமையான சோதனைகளும் வழமைபோலவே இடம்பெற்று வருகின்றன. கொழும்பிலும் அதன் புறநகர்ப்பகுதியிலும் ஆங்காங்கே சோதனைச் சாவடிகள் நீக்கப்பட்டபோதும், தமிழர் பிரதேசங்களில் இவைகுறித்து எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் யாழ். நெல்லியடிப்பகுதியில் தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் அலுவலகம் மீது ஈ.பி.டி.பியினர் கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட சம்பவமும், வவுனியா பகுதியில் தமது முகாம் மீது ரெலோ இயக்க உறுப்பினர்கள் தாக்குதலை மேற்கொண்டனரென்றும் புளெட் இயக்கத்தினர் அறிவித்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளும், படைத்தரப்பும் யுத்தநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும்போது சில தீய சக்திகளின் விசமத்தனமான தாக்குதலால் மோதல் தவிர்ப்பு முறிந்துவிடுமோ எனவும் பலர் ஐயங்கொண்டு வருகின்றனர்.

எது எவ்வாறு இருப்பினும் கடந்த 24 ம் திகதி நள்ளிரவிலிருந்து அமுலுக்கு வந்துள்ள மோதல் தவிர்ப்பு இதுவரை எந்தவித அசம்பாவிதங்களும் நடைபெறா வண்ணம் பேணப்பட்டு வருகின்றது.

சமாதானத்திற்கான நல்லெண்ண நடவடிக்கைகள் அரசிடமிருந்து மேலும் கிடைக்கும் பட்சத்தில் யுத்த நிறுத்தத்தை மேலும் நீடிக்க விடுதலைப் புலிகள் தரப்பு ஆயத்தமாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

காலங்காலமாக புதிய அரசு ஆட்சிக்கு வருவதும், யுத்தநிறுத்தம் பேச்சுவார்த்தை என காட்சிமாறுவதும், பின்னர் மீண்டும் யுத்தமே தீர்வு என படைநடவடிக்கைகளை மேற்கொள்வதுமே, வழக்கமாகிவிட்ட சிறீலங்காவில் தற்போது கிடைத்துள்ள ஓர் அரிய சந்தர்ப்பத்தையாவது பயன்படுத்தி உள சுத்தியுடன் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதுவே தமிழ், சிங்கள மக்களினதும் விருப்பமாகும்.

மொறிஸ் தர்மபாலன்



காட்டில் இருந்த மூங்கில் ஒருநாள்
கத்தியால் வெட்டப்பட்டது. நெருப்புக் கம்பி
தன்னைத் துளைத்தபோது 'ஐயோ உடல்
புண்ணாகிறதே' என்று கதறி அழுதது.
'கொஞ்சம் பொறுமையாக இரு....' என்று
மூங்கிலைப் பார்த்து ஆறுதல் சொன்னது
காற்று.
மூங்கில் புல்லாங்குழல் ஆனது.
மேடையில்
உலகமே மயங்கும் இசையை அள்ளிப்
பொழிந்துகொண்டிருந்த புல்லாங்குழலைப்
பார்த்து மேனி சிலிர்த்தது காற்று.
அது சொன்னது,

'புண்பட்டவன்
பண்பட்டவன்'

# மீண்டும் பூர்வீக கிராமத்திற்கு வருகை

## இக்னோசியோ சைலோன்

இக்னோசியோ சைலோன் (1900–1978) ஒரு வறுமை நிரம்பிய இத்தாலியக் கிராமத்தில் பிறந்தார். அவரது குடும்பம் ஒரு பூகம்பத்தில் இறந்துவிட்டது. அவரது ஒரே சகோதரன் முசோலினியின் ரகசியப் போலிசால் இறக்கும்வரை சித்திரவதைக்குட்பட்டார். பாசிச ஆட்சிக்கு எதிராக புரட்சி செய்ததற்காக இது நிகழ்ந்தது.

சைலோன் தற்கால ஐரோப்பிய இலக்கியத்தின் முன்னணி எழுத்தாளராகக் கருதப்படுகிறார். அவரது முக்கிய நாவல்களான 'பன்மாரா' ரொட்டியும் திராட்சை ரசமும் 'லுகாவின் மர்மங்கள்' என்பன ஐரோப்பிய இலக்கியத்தின் மைல் கற்கள்.

சைலோன் முசோலினியின் பாசிச இயக்கத்திற்கு எதிராக செயற்பட்ட இரகசிய அமைப்பின் தலைவராக இருந்தார். முசோலினியின் இரகசிய பொலிஸ் அவரின் மேல் பிடிவிறாந்து பிறப்பித்திருந்தது. கைதாவதிலிருந்தும், சித்திரவதைக்கு உட்படாமலிருக்கவும் சுவிஸ் நாட்டுக்குத் தப்பி ஓடினார். கடைசி வரை ரகசிய பொலிசும் அவரை பின்பற்றியபடி இருந்ததால் அக்காலகட்டம் முழுவதும் இடம் மாறிமாறி இருக்கவேண்டியிருந்தது.

முசோலினியின் வீழ்ச்சிக்குப் பின் நாடு திரும்பிய சைலோன் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். பின்பு அதிலிருந்து விலகிக் கொண்டார். இப்போது 21ம் நூற்றாண்டின் இணையற்ற ஒரு நாவலாசிரியராக (மிகவும் பிந்தியே) உலகம் அவரை ஏற்றுக் கொண்டுள்ளது. 'லூகாவின் மர்மங்கள்' என்ற நாவலில் இருந்து இந்தத் துணைக்கதை (EPISODE) எடுக்கப்பட்டுள்ளது. யுத்தம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியிருந்து தனது சொந்த ஊருக்குத் திரும்பிவருவதை இத்துணைக்கதை சொல்கிறது.

ஆங்கிலம் வழி தமிழில்:
சு.மகேந்திரன்

ஏறுவதற்கு கடினமானதும் ஆடுகளுக்கே உரியதுமான அந்தப் பாதை கரடுமுரடான ஒரு குன்றை நோக்கிச் சென்றது. அந்த வயதான மனிதன் அதனது உச்சியை அடைந்தபோது, அவரது நடையில் வேகம் குறைந்திருந்தது. ஆயினும் அவரது சுவடுகள் சீராகவே இருந்தன. உச்சியில் பாதை கரடுமுரடாகவும் வளைவானதாகவும் காணப்பட்டது. பாதையின் ஓரிடத்தில் இருந்து ஒரு பீடத்தில் இரும்பாலான சிலுவை ஒன்று மேலெழுந்திருந்தது. மூச்செடுப்பதற்காக அந்த மனிதன் ஒரு நிமிடம் தாமதித்தான். தனது முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டான்.

கால்களை நெருக்கமாக வைத்துக்கொண்டு, ஒரு பெண் சிலுவையருகே அமர்ந்திருந்தாள். இளவயதினான அந்த கிராமத்துப் பெண், தலையில் கைக்குட்டை ஒன்றைக் கட்டியிருந்தாள். அவளது பக்கத்திலிருந்த பெரிய கூடையில் சிவப்பு நிற மிளகு நிறைந்திருந்தது. அவள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாளா, அல்லது பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறாளா என மட்டிட முடியவில்லை. சிலுவை அறையப்பட்டிருந்த பீடத்தில் 'லென்றன்' மிசனைச் சேர்ந்த 'பசனேற்' பாதிரி மார்கிளன் நினைவாக எனச் செதுக்கப்பட்டிருந்தது. கி.பி. 1900. என பீடத்தில் எழுதப்பட்டிருந்ததை அந்த வயதான மனிதர் நோக்கினார். அப்போது அந்தப் பெண் அவரைக் கவனிக்கலானாள்.

'நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?' என அவள் கிழவரைக் கேட்டாள். மனிதர் விடை ஏதும் கூறவில்லை. எழுபது வயதிற்குரிய தோற்றத்துடன் அவர் இருந்தார். வறுமை வயப்பட்டவர்போல் இருந்தபோதும், திடகாத்திரமுடையவராகவே காணப்பட்டார். அழகானவராகக்கூட இருந்தார். பார்வைக்கு, இப்போது கூட வேலைசெய்யக்கூடியவர் போலவே தெரிந்தது. ஆயினும் அவரது தோற்றத்திலிருந்து அவர் எவ்வகையான வேலைகள் செய்பவர் என்பதை மட்டிட முடியாமலிருந்தது. அவர் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் அல்ல என்ற ஊகத்திற்கு, அவர் தலையில் தொப்பி அணியாமலிருந்ததும்கூட ஒரு காரணமாக இருக்கலாம். நரைத்த தலைமயிரைக் குட்டையாக வெட்டியிருந்தார். காலில் எதுவுமே அணிந்திருக்கவில்லை. பலநாள் சவரம் செய்யப்படாததால் தாடி வளர்ந்திருந்தது. உடைகள் சுத்தமாக இருந்தும் கூட ஒட்டுப்போட்டவையாகவும் கசங்கியதாகவும் இருந்தன. தடித்த கனமான அந்த உடைகள், அப்போது அங்கு நிலவிய காலநிலைக்கு ஒவ்வாதவையாக இருந்தன. வினோதமானவையாகக்கூட அவை தோன்றின. பெரிய கோதுமை ரொட்டி ஒன்றும், சப்பாத்துகளும் அவரது கழுத்தின் இருமருங்கிலும் தொங்கிய சாக்கின் வெளியே நீட்டிக்கொண்டிருந்தன.

அந்தப் பெண் தனது சட்டைப் பையிலிருந்த ஒரு நாணயத்தை தடவி எடுத்து, அதை அந்நியரான அந்தக் கிழவருக்கு அளிக்க முற்பட்டாள்.

'யோசிக்காதே இதனை எடுத்துக் கொள்' என்றாள் அந்த இளம் பெண், கிழவர் ஆலிங்கனம் செய்யப்பட்ட நிலைக்கு உட்பட்டுவிட்டவர் போன்ற உணர்வுடன் அவளது நீட்டப்பட்ட கைகளைப் பார்த்தார்.

'ஓ இல்லை' என்று மிக மெதுவான குரலில் கூறியவர் 'மிக்க நன்றி அது எனக்கு தேவைப்படவில்லை' என்றார். 'உங்களுக்கு அவமரியாதை உண்டாக்கும் நோக்கில் நான் இதனைச் செய்யவில்லை' அவள் அவரிடம் மன்னிப்புக்கேட்டுக் கொண்டாள். திரும்பவும் ஒருமுறை காசைக் கொடுக்க முயன்றாள். 'நீங்கள் நீண்ட தொலைவிலிருந்து வருகிறீர்களா? இந்தக் கிராமப் பகுதியை உங்களுக்கு முன்பே தெரியுமா?'

அவள் கூறியவைகள் கேட்டும்கூட அவர் மறுமொழி எதுவும் கூறவில்லை. நடக்கத் தொடங்கினார். எதிரே தெரிந்த மலையின் தோற்றத்தை அப்போதுதான் எதிர்கொண்டவர், பாதையில் அப்படியே நின்றுவிட்டார்.

'என்னதான் நடந்தது' எனக் கிழவர் கூவினார். அந்தப் பெண்ணின் பக்கமாகத் திரும்பி, 'அந்தக் காடுகள் எங்கே?' என்றார். 'உங்களுக்குத் தெரியாதா?' என அவள் கேட்டாள். அழுத்தம் திருத்தமாக அவர் தலையை ஆட்டினார். அவரின் முன்னால் கறுப்பாகவும் மொளியாகவும் தோன்றிய மலை, பின்புறமாகத் துருத்திக்கொண்டு நின்றது. அதன்மேல் சில தடிகளும், புதர்களும் மட்டுமே மண்டிக்கிடந்தன. 'அவர்கள் காட்டினை எரித்துவிட்டார்களா?' கவலையும் பயமும் அவரது முகத்தில் தெரிந்தன. 'யுத்தத்தின்போதுதான் இது ஏற்பட்டதா?' 'ஒருவருக்கும் இது எப்படி நடந்தது எனத் தெரியாது. சிலர் இது கடவுகளின் சாபத்தால் ஏற்பட்டது என்கிறார்கள்' 'எப்போது இது ஏற்பட்டது?' ஒருகணம் அந்தப் பெண் யோசனையில் ஆழ்ந்தாள். என்னால் அது நடைபெற்ற ஆண்டையோ அல்லது பருவ காலத்தையோ நினைவுகூர முடியவில்லை' என அவள் கடைசியாகக் கூறினாள். 'ஆனால் என்னால் நினைவுபடுத்தக் கூடியதெல்லாம், அது ஒரு வெள்ளிக்கிழமை என்பது மட்டும்தான்' 'இவ்வளவு காலமும் எத்தனையோ வெள்ளிக்கிழமைகள் வந்து போயிருக்கும்' என்றார் கிழவர். அப்போதுகூட அவரது கண்கள் மொளியாகத் தெரிந்த மலையின் முகடுகளில் நிலைத்திருந்தன.

'எவ்வாறாயினும் நீங்கள் கூறுவது சரிதான்' என அப்பெண் அவரது கூற்றை ஆமோதித்தாள். 'ஆயினும் எல்லா வெள்ளிக்கிழமைகளும் ஒரே மாதிரியானவைதான் இல்லையா?' என்றாள். அந்த மலைச்சாரலில் வெட்டப்பட்டிருந்த குறுகிய பாதையில், அவர் நடக்கத் தொடங்கினார். அவர் முதலாவது வளைவினைச் சுற்றி வந்தபோது, அந்தக் கிராமம் தோன்றியது. மலையின் சரிவில் அவளுக்கு முன்புறமாக பருந்தின் இறகுபோல் அது படர்ந்திருந்தது. உயரமான கைகாட்டி மரம் ஒன்றில் 'சிஸ்ரேனா - டைபேர்சி' என்று அதன் பெயர் செதுக்கப்பட்டிருந்தது. கடல் மட்டத்திலிருந்து 308 அடி உயரம் எனவும் எழுதப்பட்டிருந்தது. பாதையின் இரு மருங்கிலும் எரிந்த மரங்களின் அடிக்கட்டைகளும், குறியிடப்பட்ட ஒரு சில வாதுமை மரங்களுடன் கூடிய பெரிய மரப் பற்றைகளும் பக்கம் பக்கமாக அங்கு நின்றன. மலையின் அடிவாரத்திற்கு மேல் ஒரு கல்லாலான பாலம் இருந்தது, குத்தான படுகையை நோக்கி ஒரு நீரோடை பாய்ந்து கொண்டிருந்தது. அதன் கரையை அடைவதற்கு ஒழுங்கற்று வெட்டப்பட்டிருந்த ஒரு பாதையால் அம்மனிதர் கீழே சென்றார். தனது சாக்கை கீழே வைப்பதற்காக ஒரு சுத்தமான இடத்தை தேடினார். பாலத்திற்கு நேர்கீழே துருத்திக் கொண்டு நின்ற கல்லொன்றின் மீது அந்த நீரோடை விழுந்து கொண்டிருந்தது. நீரால் அக்கல் மூடப்பட்டிருக்க, ஆழமான மடு ஒன்றில் தெளிவான நீர் தேங்கி இருந்தது.

நீரோடையின் கூரையில் இருந்த புற்படுகையில் அமர்ந்து கொண்ட கிழவர், தனது புழுதி படர்ந்த தளர்ந்துபோன காலை நீரில் அமிழ்த்தினார். சில்லென்ற நீரின் பிரவாகம் அவரை மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. ஒரு பத்து வயதுப் பிள்ளையை ஒத்த சந்தோசத்துடன், கால்களைத் தண்ணீரில் விரைவுடன் உதைத்து அதனை வாரியிறைத்துக் கொண்டிருந்தார். அதன் பின் சூரிய ஒளியில் கால்களைப் படவிட்டு அவற்றை காயவைத்தார். சாக்கிலிருந்து சப்பாத்துக்களை வெளியே எடுத்தார். சப்பாத்தைப் போடுவதற்கு சற்றுச் சிரப்பட்டது தெரிந்தது. கழுத்தையும் கைமுகத்தையும் கழுவியபோது, அந்த விரைவான செய்கையில் ஏதோ புனித நீரால் அவற்றைச் சுத்தம் செய்வது போன்ற தன்மை தெரிந்தது. பின் தாகசாந்தி செய்ய ஆயத்தமானார். கூரையில் முழுமையாக நீளத்தில் உடலை கிடத்தி, நீரோடையின் பக்கமாகச் சாய்ந்து முகத்தில் நீர் படும்படியாக குனிந்து கொண்டார் கிழவர்.

ஒரு குதிரை நாள் முழுவதும் வேலை செய்துவிட்டு நீர் அருந்துவது போல் தண்ணீர் அருந்தினார். ஒவ்வொரு முறையும் நீரை அருந்தி இடை நிறுத்த அதிக நேரம் எடுத்தது. மீண்டும் உற்சாகமிழந்தவராகி வெளிக் கிளம்ப ஆயத்தமானார். அப்போது யாரோ அழைக்கும் சத்தம் கேட்டது. வேலமரம் ஒன்றின் நிழலில் புற்கரையில் ஒரு மனிதன் படுத்திருந்தான். இவ்வளவு நேரமும் அவரது பார்வையில் அவன் தட்டுப்படவில்லை. 'இங்கு பொது மக்களுக்கான நீர்ச்சுனை ஒன்று உள்ளது' என அந்த மனிதன் கூறினான் 'உங்களுக்கு நீர் அருந்த வேண்டுமாயின், கிராமத்திற்குள் சென்றால் அங்கு அது உள்ளது' 'ஓ அப்படியாயின் இப்போது உங்களுக்கென ஒரு நீர்ச்சுனைகூட உள்ளது' குரலில் ஆர்வம் தெரிய 'நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்' என்ற அந்த மனிதன், 'நீங்கள் யாரையாவது தேடுகிறீர்களா?' என்றான். அந்நியரான அந்தக் கிழவர் சடுதியாக அவசரப்பட்டார். எவ்வித மறுமொழியும் கூறாமல் மீண்டும் றோட்டிற்கு வந்தார். நிதானமாக மலை மீது ஏறி கிராமத்தின் சுற்றுப் புறத்திற்குப் போகத் தலைப்பட்டார்.

மந்தம் நிறைந்த அமைதியுடன் இருந்த அந்தப் பின்நேர நேரத்தில், கிராமம் குடிசனம் எதுவுமற்றது போலக் காட்சி அளித்தது. வீதிகள் எல்லாம் வெறிச்சோடிக் கிடந்தன. வீடுகளின் யன்னல்களும் கதவுகளும் மூடப்பட்டிருந்தன. எங்கும் அமைதி நிலவியது. தூய்மையுடன் திகழ்ந்த புதிய சிறிய வீடுகளின் சுண்ணாம்புப் பூச்சு சரியாகக் காயக்கூட இல்லை. பெருந்தெருவுக்கு முன்புறமாக பழைய குடியிருப்புக்களும் அசுத்தம் நிரம்பிய தற்காலிகக் குடியிருப்புக்களும் இடிபாடுகளிடையே காணப்பட்டன.

கிராமத்தின் உட்புறத்திற்கு அவர் வந்தபோது நடை சீரற்றதாகியது. கலவரம் அடைந்தவர் போலானவரது நடையில் வேகம் குறைந்து சட்டென அவர் நின்றார். அவர் நின்ற இடத்தில் சில வீடுகளின் இடிபாடுகள் குவியலாகக் கிடந்தன. அங்கு சற்று நேரம் தாமதித்தார். விழுந்து கிடந்த யன்னல்களையும் படிகளையும் உற்றுப் பார்த்தார். கண்ணைக் குத்தும் சூரியவெளிச்சத்தில், பாதையின் நடுவில் நடக்க ஆரம்பித்தார்.

கண்ணால் பார்க்க முடியாத காதால் கேட்க முடியாத உணர்வுகளைத் தந்த அந்த இடிபாடுகளுக்கூடாக அவர் போனார். அவரைப் பார்த்தபோது பேய் பிடித்தவர்போலவும் தோன்றியுது.

அந்தப் பழமையான தேவாலயத்திற்கு அருகே அவர் வந்தபோது, சிறிது தயங்கினார். பின் பாதிரியார் விடுதிக்குச் சென்றார். அவ்வீட்டிற்கு, வந்தபோது வீட்டின் வரவேற்பு மணிக்கு அண்மையாக அவர் செல்வதை தடுக்கும் விதத்தில், ஈக்களும் தூசியும் நிரம்பியிருந்த அந்த இடத்தில், ஒரு மனிதன் சுருண்டபடி படுத்திருந்தான். அரைகுறையாகவும் கிழிந்த நிலையிலுமிருந்த அவனது உடைகள், கறுத்து வற்றிப் போயிருந்த உடலை வெளிப்படுத்திக் காட்டியது அவனது உடல் எரிந்த சடலம் போலிருந்தது. ஆயினும் அந்நியரான அந்தக் கிழவரது நிழல் பட்டதுமே, அவனை எழுப்புவதற்கு போதுமானதாக இருந்தது. 'இந்த நேரம் பார்த்து நீ இங்கு ஏன் வந்தாய்?' நித்திரயிலிருந்தவன் கோபத்துடன் முணுமுணுத்தான். அவனது கண்கள் அரைகுறையாக மூடியிருந்தன. 'நான் பங்குத் தந்தையை சந்திக்க விரும்புகிறேன்' படுத்திருந்தவனுக்கு முகத்தில் மெலிதாக எரிச்சல் உண்டாகி மறைந்தது.

'நாங்கள் வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே தர்மம் செய்வதென எத்தனை முறை உனக்குக் கூறுவது' என அவன் தனது வாய்க்குள் முணுமுணுத்தான். 'பங்குத்

# கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர்கள்




வாழைச்சேனை வாகனேரிப் பகுதியில் 11.12.2001 அன்று இராணுவத்துடன் ஏற்பட்ட மோதல் ஒன்றில் 8 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**அம்பாறை மாவட்ட துணைத் தளபதி**
ஜீவன்/ எழிலன்
பிள்ளையான் சந்திரமோகன்
மட்டக்களப்பு.

**கப்டன் சேகரன்**
சண்முகம் காந்தரூபன்
மட்டக்களப்பு.

**வீரவேங்கை சங்கர்**
அமிர்தலிங்கம் இராஜகரன்
மட்டக்களப்பு.

**வீரவேங்கை தயாகரன்**
கிருஸ்ணபிள்ளை இராஜு
மட்டக்களப்பு.

**வீரவேங்கை திருமகன்**
வடிவேல் மதியன்
மட்டக்களப்பு.

**வீரவேங்கை சுஜீதன்**
நவசிவாயம் இராசா
மட்டக்களப்பு

**வீரவேங்கை குகராஜ்**
நல்லரத்தினம் சிவராஜ்
மட்டக்களப்பு.

**வீரவேங்கை சதானந்தன்**
தங்கராஜா ரவிக்குமார்
மட்டக்களப்பு.

11.12.2001 அன்று வாழைச்சேனை பொலிஸ் நிலையம் மீது நடாத்தப்பட்ட வெற்றிகரத் தாக்குதலில் 10 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**லெப். மணிராஜ்**
சிங்காரவேல் மகேந்திரன்
மட்டக்களப்பு.

**லெப். மணியரசன்**
குமாரசாமியார் ரவிச்சந்திரன்,
மட்டக்களப்பு.

**2ம் லெப். மணிக்கண்ணன்**
கனேஸ் சண்முகானந்தன்
மட்டக்களப்பு.

**2ம் லெப். உமாகரன்**
சிவசம்பு சசிகுமார்
மட்டக்களப்பு.

**வீரவேங்கை முகுந்தன்**
அழகப்போடி ஜெயானந்தன்
மட்டக்களப்பு.

**வீரவேங்கை விநோகரன்**
சதாசிவம் சவுந்தரராஜன்
மட்டக்களப்பு.

**வீரவேங்கை மணிப்பிறை**
மகேந்திரன் மகேஸ்வரன்
மட்டக்களப்பு.

**கப்டன் பிரதாபன்**
இராசையா சற்குணம்
அம்பாறை.

**லெப். சற்குணராஜ்**
தம்பிப்பிள்ளை மதியழகன்
அம்பாறை.

**லெப். முகுந்தன்**
நடராசா யோகேஸ்வரன்
அம்பாறை.

12.12.2001 அன்று மூதூர் பாலத்தோப்பூர் பகுதியில் அமைந்திருந்த இராணுவ புலனாய்வு முகாம் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் 4 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**லெப். கேணல் மனோஜ்**
பாலசிங்கம் வசந்தகுமார்
திருகோணமலை.

**மேஜர் குமாரவேல்/ குச்சுமணி**
செல்வராசா ஆனந்தன்
மட்டக்களப்பு.

**2ம் லெப். தேவன்**
கென்றி செபஸ்ரியான்
திருகோணமலை.

**லெப். கலைமதி**
செல்வநாயகம் தர்சினி
திருகோணமலை.

14.12.2001 அன்று அம்பாறை மாவட்டம் 19ம் கட்டைப் பகுதியில் சிறீலங்கா சிறப்பு அதிரடிப்படையினருடனான மோதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**கப்டன் ரதிகரன்/ அருள்**
கணபதி அருள்நாயகம்
பொலநறுவை.

16.12.2001 அன்று திருமலை கும்புறுப்பிட்டிப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடனான எதிர்பாராத மோதல் ஒன்றின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளனர்.

**மேஜர் சுஜி/ ஈழமாறன்**
மாட்டீன் சாமுவேல் அன்ரனிராஜ்
திருகோணமலை.

18.12.2001 அன்று முகமாலை பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடனான மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை ஆதினி**
கதிரமலை கோமளா
மட்டக்களப்பு.

20.12.2001 அன்று முல்லை மாவட்டத்தில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**லெப். ஜீவரட்ணம்**
சிறீஸ்கந்தராசா கிருபைதாசன்
அம்பாறை.

---

தந்தையைப் பார்க்கமுடியாதா?' எனத் திரும்பவும் அந்நியரான அந்தக் கிழவர் அவனை வற்புறுத்தினார். 'டொன் பிரான்சிஸ்கோ ஆழ்ந்த துயிலில் இருக்கிறார்' என அவன் முணுமுணுத்தான் 'எல்லோரும் ஆழ்ந்த நித்திரையில் இருக்கிறார்கள்' கிழவர் திகைப்படைந்தது தெரிந்தது. 'பங்குத் தந்தையின் பெயர் என்ன என்று சொன்னாய்?' 'அவரது பெயர் டொன் பிரான்சிஸ்கோ உனக்குத் தேவையானதெல்லாம் அதுதானா?' 'ஓ அப்படியாயின் உன்னைத் தொந்தரவு செய்ததற்கு மன்னித்துவிடு' என்ற கிழவர் 'தான் தேடிவந்த மனிதர் அல்ல' என்றார்.

சேர்ச்சிலிருந்து வெளியேறிய கிழவர் வீட்டு நடைபாதையை ஒத்த வளைந்த குறுகிய சந்துகளின் வழியாக பிரேமையில் மூழ்கியவர் போல சென்றுகொண்டிருந்தார். இந்த இடமே கிராமத்தின் மிகப் பழமையான பகுதி, பரப்பிய சிறிய கற்களைக் கொண்ட பாதையில் அவர் வைத்த ஒவ்வொரு அடியும் இரவு நேரங்களில் சப்தமிடாமல் இரை தேடி அலையும் பிராணிகளின் நடையைப் போலிருந்தது. சடுதியாக இந்த அமைதி. ஒரு பழைய வீட்டின் முதலாம் மாடியின் யன்னல்கள் விசையுடன் திறக்கப்பட்டதால் ஏற்பட்ட படபடவென்ற ஓசையால் சிதைவடைந்தது. இருட்டில் தடவியபடி கண்மணிகளற்ற வெற்று நேத்திரக் குழிகளையுடைய ஒரு பெண் செய்வது அறியாது தடுப்புகளின் பக்கமாக வந்தாள். அவள் மெலிந்து உயரமாகவும் இருந்தாள். பிரத்தியேகமான கறுப்பு உடை ஒன்றை அணிந்திருந்தாள். நெருங்கி வரும் கிழவரின் காலடி ஓசையை அவதானித்தாள். 'யார் அங்கே நடந்து வருவது?' என ஊடுருவும் குரலுடன் அவள் கத்தினாள். 'நீ வருவது எனக்கு கேட்கிறது மனிதனே' என்றாள்.

சடுதியாக கால்த் தடங்களின் ஓசை நின்றது. கிழவர் இந்த ஒழுங்கையின் நடுவில் நின்றுகொண்டார். உருவமற்ற ஒன்றைப் பார்ப்பது போலிருந்தது அவரது பார்வை. 'அது நீதானா', இப்போது அந்தப் பெண்ணின் குரலில் ஆர்வமும் இரக்கமும் தெரிந்தது 'மீண்டும் மீண்டும் அது நீதானா' எனக் கூறியபடி இருந்தாள். ஆயினும் ஒருசிறு பெண் இனிமையாகப் பேசி குருடியைப் பணியவைத்து அரவணைத்துக்கொண்டு உள்ளே சென்றாள். 'அது யாரோ ஒரு நாடோடி' என்ற அச்சிறுமி மீண்டும் அந்த வசனத்தை சொன்னாள். 'ஏமாற்றுவித்தைகள் புரியும் இந்த நாடோடிகளிடம் கவனமாக இரு' என அந்தக் குருட்டுப் பெண் வீரிட்டகுரலில் கூறினாள். அந்தக் குரலில் திருப்தியற்ற தன்மை காணப்பட்டது.

மேல்மாடியில் கதவுகள் மீண்டும் மூடும் வரை கிழவர் அங்கிருந்து அசையவில்லை. அதன் பின் அவர் அங்கிருந்து போகத் தலைப்பட்டார். ஆனால் அவரது நடை இப்போது மெதுவானதாகவும் நுனிக்காலில் நடப்பதுபோலவும் இருந்தது. அவரது இலக்கை அடைவதற்கு இனி அதிக தூரம் செல்ல வேண்டி இருக்கவில்லை. அது ஒரு சிறிய சதுக்கம். மூன்று பக்கங்களிலும் இடிபாடுகளிருந்தன. நான்காவது பக்கத்தில் ஒரு சிதைந்த வீட்டின் மேல் பகுதி மிகுந்திருந்தது. இரு கதவுகளுக்கும் குறுக்காக மரச் சட்டங்கள் கிடையாக ஆணியால் அறையப்பட்டு வீடு தாழிடப்பட்டிருந்தது. மேல்மாடியின் ஒரு பக்கச் சுவர் வீழ்ந்திருந்தது. காலநிலை மாறுதல்களுக்கும் புல் பூண்டுகளின் தயவிற்கு அக் கட்டிடத்தின் உட்பகுதி ஆட்பட்டிருந்தது.

தனது சாக்கை கிழவர் கீழே வைத்தார். சடுதியாக திருகி இழுத்தும் எகிறி பெருமூச்சு வரும்வரை தள்ளியும் தாழ்ப்பாளாக அமைந்திருந்த மாச்சட்டங்களை கதவினின்றும் அகற்ற முயன்றார். ஆனால் அந்த மரச் சட்டங்கள் வைரம் பொருந்திய கசுக்கொட்டை மரத்தாலோ அல்லது புன்னை மரத்தாலானவையோ தெரியாது. மேலும் ஆணிகள் பெரியனவாகவும் துருப் பிடித்தும் ஆழமாக அடிக்கப்பட்டிருந்த காரணங்களாலும் கதவிலிருந்து அகலமறுத்தன.

'நீங்கள் வீணாக உங்கள் நேரத்தைச் செலவு செய்கிறீகள்' 'எனக்கு வீட்டின் உட்புறம் எப்படி இருக்கும் எனத் தெரியும்' என அதே குரல் குதூகலத்துடன் தொடர்ந்தது. அங்கு எதுவுமே திருடுவதற்கு மீதமில்லை.

அந்தக் குரலுக்குரியவன் விஷமத்தன்மை கொண்ட சப்பாத்து அணியாத ஒரு சிறுவனாக இருந்தான். சிக்குடன் கூடிய தலைமயிருடன், நீளம் குறைந்த கால் சட்டை அணிந்திருந்தான். கால்சட்டை இடுப்பில் நிற்பதற்காக கயிற்றினால் கட்டப்பட்டிருந்தது. குவிக்கப்பட்டிருக்கும் இடிபாடுகளை உடைய பகுதியைச் சேர்ந்தவனாக இருக்கவேண்டும். பயத்தை உண்டுபண்ணும் அந்த இடிபாடுகளின் நிறத்தை ஒத்திருந்தது அவனது நிறம்.

மேலும் பல தடவைகள் அந்தக் கதவை தனது தோள் மூட்டால் உக்கிரமாக அடித்து அதனை திறக்க முனைந்தார் கிழவர். 'உங்களுக்குத் தேவையானதெல்லாம் ஒரு இரும்புக் கோல்தான்' என்றான் பையன். அவன் பேசும்போது ஏதோ ஒன்றைத் தனது பின்புறமாகப் பிடித்தபடி இருந்தான். 'உண்மைதான். தேவையானது என்னவோ ஒரு இரும்புக்கோல்தான்' என்றார் கிழவர். 'ஆயினும் அதனை எப்படி நான் பெற்றுக் கொள்ளப் போகிறேன்'

'என்னுடன் நீங்கள் சினேகம் பூண்டால் என்னுடையதை உங்களுக்குக் கொடுக்கமுடியும்' தான் மறைத்து வைத்திருந்த கோலை அவரிடம் அவன் அளித்தான். 'நன்றி' என்ற கிழவர் இப்போது சிரத்தை காட்டத் தொடங்கினார்.

'உன்னுடைய பெயர் என்ன?' 'டொனி, உங்களுடையது' 'லுகா, யார் உனது தகப்பனார்?' 'எனக்குத் தெரியாது. ஆனால், எல்லோரும் பன்றித் தலையன் என அழைக்கிறார்கள்' கிழவர் சிரித்துக் கொண்டார். 'நல்லது, நான் ஜம்பமடிக்க விரும்பவில்லை. அல்லது என்னையும் உன்னையும் ஒப்பிடவும் முடியவில்லை. ஆனால் உனது வயதில் நான் இருந்தபோதும் என்னையும் அந்தப் பெயரால் அழைத்தார்கள்'

ரொனி வெடிச் சிரிப்புச் சிரித்தான். அதனால், அவனது முகத்தில் தேங்கி இருந்த அழுக்கில், உழவியது போன்ற மெலிந்த கோடுகள் உண்டாக்கியது. அவனது வினோதமான பச்சை நிறக் கண்களில் வயதிற்கு மீறிய புத்திசாதுரியம் ஜோதிபோல் பிரகாசித்தது!

'நல்ல சினேகிதரா நீங்கள் இருப்பீர்களா?' எனக் கேட்ட அவனது குரலில் பவித்திரம் நிறைந்திருந்தது. 'ஒரு உறுதி மொழியை உங்களால் காப்பாற்ற முடியுமா?' 'அப்படி முடியுமெனவே நினைக்கிறேன்' 'உங்களால் ஒரு இரகசியத்தை காப்பாற்ற முடியுமா?' 'ஆமாம் ரொனி என்னால் அது முடியுமெனவே நினைக்கிறேன். இன்னும் ஏதாவது கேள்விகள் உள்ளனவா?'

'இப்போதைக்கு அது போதும், விரையுங்கள், அயலவர்கள் விழித்தெழுவதற்கு முன்பு எமது வேலையை முடித்து விடுவோம்'

அவரது வீட்டுக்கள் அந்தச் சிறுவனுடன் அவர் சென்றார்.



தாயகக் கவிஞர் புதுவை இரத்தினதுரை

# ஆணி வேரறுந்து அடி சாயும் வரை நச்சு மரங்களை நம்ப முடியாது!

மாரிமழை பொழியும் மார்கழி
மாதத்திலும் ஊரில் இம்முறை
உஷ்ணமிருந்தது. வாரியடிக்காது
தூறிற்று வறுமையுற்ற மழை.
கிணற்றில் நீரேற்றாத சிணுங்கல்.
மழையில்லையேயென்ற மனக்குறை யாருக்குண்டு?
எல்லோரும் கூத்து மேடையில்தான்
குறியாயிருந்தனர்.
நீங்களில்லாமல்
ஊர்முற்றத்தில் மீண்டும் ஒரு கூத்து அரங்கேறியது.
புயல் மையம் கொண்ட வன்னியில் மட்டும்தான்
கூத்து நடக்கவில்லை.
பார்த்துப்பார்த்து அலுத்துப் போன கூத்தென்பதால்
யாரும் அலட்டிக் கொள்ளவுமில்லை.
கம்பி வேலிக்குள்ளேதான் காத்தான் கூத்து.
முடிந்ததும் முகத்தில் பூசிய அரிதாரம் அழித்து
ஒப்பனை கலைத்துக் கொண்டனர் நடிகர்கள்.
உண்மை முகத்தோடு இனித்தான் உலாவருவர்.
என்ன செய்வார்களோ?
தலைநகரில் கூத்தாடிகளுக்கோர் கலையரங்குண்டு.
அங்கு ஆடத்தான் இந்த அரங்கேற்றம்.
பெரிய நடிகருக்கு பிரதம வேடம்;
மற்றவர் சிலருக்கு மந்திரி வேடம்;
வசனம் பேசும் வாய்ப்பு சிலருக்குத்தான் வாய்க்கும்.
சிலர் கோமாளி வேசத்தில் சிரிப்புக் காட்டுவர்.
பக்கப் பாட்டுக்காரர்கள்
உச்சஸ்தாயியில் பாடிவிட்டு உறங்கிப்போவர்.
வாயே திறக்காமல் வந்து போவோருமுண்டு.
இம்முறையும் கூத்து முடிந்ததும்
எல்லோரும் கொழும்புக்குப் போய்விட்டனர்.
ஊர்முற்றத்தில் ஒருவரிலர்.
காற்றில் பறக்கிறது கடலை சுற்றிவிற்ற தாள்கள்.
கூத்துப் பார்த்த அலுப்பில்
ஊரே உறங்கிக் கிடக்கிறது.
இந்தக் கும்பகர்ணத் தூக்கம் கலைய
இனி ஐந்து வருடங்களாகலாம்.
சென்ற முறை 'தேவேந்திர' வேடமிட்டாடியவருக்கு
இந்த முறை இரண்டு புள்ளிகள் மட்டுமே.
கோபுரத் திருப்பணி செய்தும் கொடுப்பனவில்லை.
சாமிகளும் காலைவாரி விட்டன.
அத்தியடி ராசாவுக்கு ஆட்டம் பிழைத்துப் போனது.
தீவினை சூழ இப்போதவர் தீவிலே வாசம்.
நடராச மைந்தன் கடலோரம் போய்விட்டார்.
ஊர்காவற்றுறையிலிருந்து படகேறும் உத்தேசமாம்.
பழைய கூத்தாடிகள் பலர் படுத்துவிட்டனர்.
புதிய நடிகர்கள் சிலர் புறப்பட்டுள்ளனர்.
என்ன நடக்குமோ எவருக்கும் தெரியவில்லை.
வன்னிக்கு மட்டும் எந்தச் சபலமுமில்லை.
தன் வாழ்வுக்கான முனைப்பில்
தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருக்கின்றது.
ஐம்பது வருடக் கூத்தில் எந்த நம்பிக்கையுமில்லை.
அதே பாடல்;
அதே வசனம்;
அடிக்கடி கூத்தாடிகள் மாறுவர் அவ்வளவேதான்.
ஊர்வேரை இழுத்தறுக்கா உறவுகளே!
கூத்தாடிகளை நீங்களும் நம்பாதீர்.
பாராளுமன்றக் கூத்தரங்கும்,
பதவியேறப் போடும் ஒப்பனையும்,
அடுக்கு மொழியில் அள்ளி வீசும் வாக்குறுதிகளும்
ஐம்பது வருடத்தில் தந்தது தானென்ன?
ஊமையராய் எமையடக்க உத்தரவிட்டதன்றி
அந்தத் 'தேவர்சபை' செய்ததொன்றில்லையே.
கைவிலங்கறுத்து காற்றில் மிதக்கும் நாட்களுக்காக
நாங்கள் காத்திருந்தோம்.
அந்நாட்கள் அண்மித்த போதுதான்
இந்த அரங்கேற்றம் நடந்தேறியுள்ளது.
நாங்கள் தொடர்ந்தும் நடந்து கொண்டிருக்கின்றோம்.
காலில் வலியில்லை;
கண்களில் சோர்வில்லை;
நட்சத்திரங்கள் நமக்கெனும் நம்பிக்கையில்
எட்டித் தொட எத்தனிக்கின்றோம்.
நிச்சயம் தொட்டு நிற்போம்.
உயிரில் திரி மூட்டிய உரிமைப் போரல்லவா?
எப்படி அணையக் கூடும்?
அடிவரை இறைத்தாலும்
ஊற்று நீர் சுரந்து வருகிறது.
வெட்ட வெட்டத் தழைக்கிறது வீரமரம்.
திசை மயக்கங்கள் எமக்கேதுமில்லை.
சுட்டும் திசை சரியானதெனும் துணிவில்
எட்டி நடக்கின்றன கால்கள்.
இலக்குத் தெரியும் இடத்தை அண்மித்த நம்பிக்கை.
துலக்கமாக வெளித்துள்ளது ஊர்முற்றம்.
உறவுகளே!
மாரீச மான்களின் பின்செல்லும் மயக்கத்தில்
யாரேனும் தளர்ந்து விடாதீர்.
கொடுத்த விலைக்கீடாக எடுக்க வேண்டுமல்லவா?
'போரில்லாத புத்துலகு'
'சாந்தி நிலவும் சமாதான பூமி'
'யுத்தமில்லாத நாடு'
'ரத்தம் சிந்தாத நாட்கள்'
கேட்கும்போது சந்தோசம் கிளர்கிறதுதான்.
தருவது யாரென்றுதானே தெரியவில்லை.
தமிழரையும் சமமாக எடைபோட
தலதா மாளிகை சம்மதிக்குமா?
வாழ்வு எல்லோருக்கும் வசமாகிப்போக
எந்த அதிகார வர்க்கம் அனுமதிக்கும்?
ஆணிவேரறுந்து அடிசாயும்வரை,
நச்சு மரங்களை நம்பமுடியாது.
பட்டது போல் கிடந்து விட்டு துளிர்க்கும்.
அதுதானே இனிமேலும் நடக்கும்.
புதுமணத் தம்பதிகளின் கலகலப்பு போன்று.
ஒட்டியுரசிக் கொண்டு
ஓரிரண்டு மாதங்கள் போகும்.
மூன்றாம் மாதம் மூச்சே பிடிக்காது.
தொட்டதற்கெல்லாம் சிடுசிடுக்கும்.
எட்டத்தில் விரிக்கப்படும் இன்னொரு படுக்கை.
தேனிலவுக் காலம் வாழ்நாள் முழுமைக்கும் வருவதில்லை.
ஆறு மாதம் வரையும்தான் அணைப்பின் சுகம்.
அதன்பிறகு தனித்தனிப் படுக்கைதான்.
யுத்தத்தின் சத்தமற்ற யுகமொன்று
அந்த யுகத்தில் தமிழரின் ஆனந்த வாழ்வு
வருமெனும் நம்பிக்கையின்
நாங்கள் ஆயுதங்களை முறித்தெறியவும் ஆயத்தம்.
ரத்தம் சிந்தாத புத்துலகை யார்தருவார்?
ஊருக்குத் தானே உபதேசம்.
தனக்கென வரும் போது மட்டும்
தத்துவங்களைத் தள்ளிவைத்து விடுகின்றனர்.
எமக்கு விடுதலை வேண்டும்!
ஆளும் உரிமைக்காக நாங்கள் அடிபடவில்லை.
வாழும் உரிமைக்காகவே வாதாடுகின்றோம்.
விடுதலையென்பதின் விளக்கம் தெரியாமல்
பேச்சுவார்த்தைக்குப் புறப்படக் கூடாது.
விடுதலையென்பது;
தன்னைத் தானே தீர்மானிக்கும் ஜீவிதம்;
யாருக்கும் தலைகுனியாத சோபிதம்;
காற்றும், நீரும்
கடலும், நிலமும்
வாழ்வும், வளமும்
எல்லோருக்கும் உரித்தான ஏற்பு!
ஏற்றுக் கொள்ளுமா ஜெயவர்த்தனபுரம்?
விட்டுத் தருவார்களா விகாராதிபதிகள்?
ஒத்துக் கொள்ளுமா உலகு?
காலம் தாழ்த்தியாயினும் கண்களைத் திறந்து
வாழும் உரிமையைத் தரட்டும்.
நாங்கள் போரை நிறுத்திக் கொள்கின்றோம்.
அதுவரை யாரும் அவசரப்படக் கூடாது.
கிடைக்குமென்ற நப்பாசையில் படுக்கக்கூடாது.
விடுதலை வரையும் விழிப்பாயிருப்போம்.
ஊர்முற்றத்திற்கு உறக்கமென்றேது?
காவலரணில் அது கூடிநிற்கிறது.
எங்களின் வேர் முற்றமே!
நீங்களும் விழிப்பாயிருப்பீர்.
உண்மைக்கு ஒரு நாளும்
உயிர்போவதில்லை.
சத்தியம் வெல்லும்.
தர்மமே சிரிக்கும்.

